# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
5000 பிரதிகள்

பங்குனி – சித்திரை 2017 | சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 44


# பிரான்ஸ் அதிபர் தேர்தல் - 2017



# வெல்லப்போவது யார்?

## பிரான்சின் 6வது குடியரசு உதயமாகுமா?

பிரான்சின் 5வது குடியரசின் 11வது அதிபர் தேர்தல் எதிர்வரும் 23 ஏப்ரல் மற்றும் மே 7ல் நடைபெறவுள்ளது. மார்ச் மாதம் 17ம் திகதியுடன் வேட்பாளர் அறிவிப்பும் முடிவுக்கு வந்துவிட்டது. 500 ஆதரவு கையொப்பங்கள் பெற்ற 11 வேட்பாளர்கள் 23 ஏப்ரலில் முதற்சுற்றில் மோதிக்கொள்ளப் போகின்றார்கள். 2012 தேர்தல் முதற்சுற்றில் 10 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

2017இல் 8 வேட்பாளர்கள் பல நாட்களுக்கு முன்னரே தமது ஆதரவுக் கையொப்பங்களைப் பெற்று தெரிவாகியிருந்தனர். மீதி மூவரும் கடைசி நாளான 17 மார்ச் வரை திணறித்தான் தமது ஆதரவை இறுதி நிமிடத்தில் பெற்றுள்ளனர்.

முதல் சுற்றில் தேர்வடையக்கூடியவர்கள் என மரின் லூப்பனையும் (26.6%) இம்மனுவல் மக்ரோனையும் (25.5) கருத்துக்கணிப்புகள் அடையாளப்படுத்துகின்றன. இவர்களைத் தொடர்ந்து பிரான்சுவா பியோன் (18.9%), பெனுவா ஹமோன் (12.9%), யோன்லூக் மெலன்சோன் (11.6%) ஏனையோர் (5.3%) என வரிசைப்படுத்தப்படுகின்றனர். இவர்களில் பிரான்சின் அதிபராக இருக்கக்கூடிய தகுதி யாருக்கு உள்ளது என மக்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு 47 வீதமான மக்கள் இம்மனுவல் மக்ரோனின் பக்கம் கையைக் காட்டியுள்ளனர். மரின் லூப்பன் 29 வீதமும், பிரான்சுவா பியோன் 29 வீதமும், பெனுவா ஹமோன் 28 வீதமும், யோன் லூக் மெலன்சோன் 24 வீதமும் தகுதியானவர்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, கடன், ஐரோப்பிய ஒன்றியம், அகதிகளின் வருகை என ஒவ்வொரு வேட்பாளரும் முன்வைத்துள்ள தமது வளர்ச்சி நிரல்கள் பல அரசியல் பொருளாதார ஆய்வு அமைப்புகளால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் பிரான்சின் லிப ரல் அமைப்பான IFRAP *(Fondation pour la recherche sur les administrations et les politiques publiques)* ஆய்வறிக்கை பெருங்கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது. IFRAPன் ஆய்வின் அடிப்படையில் வலதுசாரிய வேட்பாளரான பிரான்சுவா பியோன் முன்வைத்துள்ள திட்டங்களே ஓரளவேனும் பயனுள்ள திட்டமாகும் எனத் தெரிவித்துள்ளனர். இம்மனுவல் மக்ரோனின் திட்டங்களில் சமமான தன்மை இருந்தாலும் அவை பிரான்சில் எவ்விதமான மாற்றங்களையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

2ம் பக்கம் பார்க்க..


நிலா
www.nilafrance.com

தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94 sangeethafrance@gmail.com

மார்ச் மாதம் 20ம் திகதி பிரான்ஸ் 5வது குடியரசில் முதல் முறையாக முதற்சுற்று தேர்தலுக்கு முன்னர் முக்கிய 5 வேட்பாளர்கள் பங்குபற்றிய விவாதம் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இவ்விவாதம் 10 மில்லியன் மக்களால் (48 வீதம்) கவனிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**தேர்தல் பிரச்சாரங்களில் முக்கிய 5 வேட்பாளர்களும் அவர்களின் தேர்தல் வாக்குறுதிகளும் !**



## Benoît Hamon

இடதுசாரிக் கட்சியான (PS) சோசலிசக்கட்சி வேட்பாளர்

**"நான் பிரான்சின் அதிபரானால் பிரான்ஸ் மக்களுக்கு நேர்மையான நியாயமான அதிபராக இருப்பேன்"**

- அனைவருக்குமான ஒரே வருமானம் (Revenue universel)
- சமூகக் கொடுப்பனவுகள் மற்றும் SMIC ஊதிய உயர்வு
- சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான புதிய 500000 வேலை வாய்ப்புகளின் உருவாக்கம்

ஆகிய திட்டங்கள் மக்கள்மத்தியில் கவனஈர்ப்பைப் பெற்றுவருகின்றன.

முன்னாள் கல்வி அமைச்சருக்கு சோசலிசக்கட்சி பிரமுகர்களின் முக்கிய ஆதரவும் இடதுசாரிய பின்புலமும், முதற்சுற்றில் முன்னாள் பிரதமர் மனுவல் வால்சைத் தோற்கடித்தார் என்பதும் பலமே. இருப்பினும் அணுகுமுறைகளும் நிகழ்ச்சி நிரல்களும் அதிபர் பிரான்சுவா ஹொலந்தை ஒத்திருப்பது எதிர்மறைப் புள்ளியாகக் கருதப்படுகின்றது. அத்துடன் ஒரே கட்சியைச் சேர்ந்த மனுவல் வால்ஸ் எனது ஆதரவு Benoît Hamon க்கு இல்லை எனக் குறிப்பிட்டுள்ளதும் பின்னடைவுகளாகும்.

இன்று 49 வயதாகும் Benoît Hamon 1986ம் ஆண்டு முதல் சோசலிசக்கட்சி உறுப்பினராக இருந்து வருகின்றார். 1993ல் சோசலிசக்கட்சி இளைஞர் அணித்தலைவர் 2004 – 2009 ஐரோப்பியப்பாராளுமன்ற உறுப்பினர். 2008 – 2012 கட்சியின் பேச்சாளர், 2012 – 2014 பொருளாதாரத்துறை அமைச்சர், 2014ல் கல்வி அமைச்சர் என பல பதவிகளை வகித்துவந்துள்ளார்.

சோசலிசக்கட்சி முதற்சுற்றுத் தேர்தல் நடைபெறும் என அறிவித்தபின் முதல் வேட்பாளராக களமிறங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆரம்பம் முதலே அதிபர் பிரான்சுவா ஹொலந்தையும் அவரின் ஆட்சியையும் Benoît Hamon தொடர்ந்து விமர்சித்து வருகின்றார்.

Burkini போடத்தடை, Notre-Dame-des-Landes விமானநிலையம் கட்டுவதற்கான திட்டம் என மக்களால் எதிர்க்கப்பட்டு அரசால் ஆதரிக்கப்பட்ட பல திட்டங்களை மக்களுடன் கூட நின்று அரசை வன்மையாக கண்டித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## François Fillon

வலதுசாரிக்கட்சியான Les Républicains வேட்பாளர்.

**"நான் பிரான்சின் அதிபரானால் எதிர்வரும் 10 வருடங்களில் ஐரோப்பாவின் முதன்மையான பலமான நாடாக பிரான்சை மாற்றிக் காட்டுவேன்"**

- அரச செலவீனங்களில் 100 மில்லியாட் யூரோக்கள் சிக்கனப்படுத்தப்படும். இத்தொகை அரச பணியிலுள்ள 500000 பணியாளர்களைக் குறைப்பதன் மூலம் பெறப்படும்
- (ISF) பெரும் செல்வந்தர்கள் மீதான கூடுதல் வரி அறவீடு நிறுத்தப்படும். இத்திட்டம் சோசலிசக்கட்சியினரால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டமாகும்.
- TVA வரி கூட்டப்படும்
- 35 மணி நேர வேலை முடிவுக்குக் கொண்டுவரப்படும்
- அகதிகள் வருகை மட்டுப்படுத்தப்படும்

பிரபலமான வேட்பாளராகவும், சிறப்பான தேர்தல் வாக்குறுதிகளைக் கொண்டிருந்தாலும் அண்மையில் குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பு அளித்தமை, அன்பளிப்பாக பெறப்பட்ட 13000யூரோ பெறுமதியான Costume, சொத்து மதிப்புகளில் குழறுபடி, ஊழல் என வழக்குகள் விசாரணையில் உள்ளமை இவரின் மைனஸ் புள்ளிகளாகும்.



## Jean Luc Mélenchon

தீவிர இடதுசாரி பின்புலம் கொண்டவர். இவரது புதிய கட்சி 'La France insoumise' (பிரான்ஸ் யாருக்கும் அடிபணியாது!)

**"நான் பிரான்ஸ் அதிபரானால் பிரான்சின் 5வது குடியரசின் கடைசி அதிபர் நான்தான்! புதிய 6வது குடியரசு உதயமாகும்! தற்போது போன்ற ஒரு நாட்டு அதிபரின் முடியாட்சி முறையை முற்றாக ஒழிப்பேன்"**

- நிறுவனத்தின் பொருளாதார நிலையைக் காரணம் காட்டி


**சங்கீதா அச்சகம்**

**39, Bd. de la Chapelle**
**75010 Paris**
M°: La Chapelle
sangeethafrance@gmail.com
**Tél. / Fax :**
**01.44.72.08.94**

மேற்கொள்ளப்படும் வேலை நீக்கங்கள் (Licenciements boursiers) முற்றாகத் தடை செய்யப்படும்

- ஓய்வூதியம் 60 வயது முதல் பெறமுடியும்
- மக்கள் வங்கி ஆரம்பிக்கப்படும்
- 5 வார விடுமுறை நாட்கள் 6 வாரங்களாக மாற்றப்படும்
- 1151 யூரோவாக இருக்கும் சிமிக் (SMIC) 1326 யூரோவாக மாற்றப்படும்
- நிச்சயமாக அகதிகளின் வருகை ஏற்றுக்கொள்ளப்படும்
- மிகவும் பழமையான அணுமின் நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் புதிய புதுப்பிக்கத்தக்க வலுக்களின் (Energie renouvelable) உருவாக்கத்திற்கு அதிகளவு நிதி ஒதுக்கப்படும்
- பாடசாலைகள் கன்றின்கள் உட்பட அனைத்தும் இலவசம் எனப் பல மக்களின் நலன் கருதிய திட்டங்களை முன் வைத்துள்ளார்.

மாற்றம் என்பதே மாறாத விதி! என்பதில் முழுநம்பிக்கையுடன் தனது திட்டங்களை பரிந்துரைத்துள்ளார்.



**Emmanuel Macron**

En Marche ! தோற்றுவிப்பாளர், முன்னாள் சோசலிசக்கட்சி உறுப்பினர், தற்போது நான் இடது சாரியும் இல்லை வலது சாரியும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்

**“நான் பிரான்ஸ் அதிபரானால் பிரான்சின் அனைத்து பின்னடைவுகளையும் நிவர்த்தி செய்யக்கூடிய புதிய பல மாற்றுத்திட்டங்கள் வைத்துள்ளேன்”**

- 80 வீத மக்களுக்கு Taxe d’habitation விலக்கப்படும்
- மக்கள் மீதான அதீத வரிகள் குறைக்கப்படும்
- ஓய்வூதியத்திட்டங்கள் மீள்பரிசீலனை
- 50 மில்லியாட் யூரோ வருவாய் பெறுவதற்கான புதிய திட்டங்கள்.

அனைத்து கட்சிகளின் மீதும், தலைவர்கள் மீதும் விரக்தியில் இருக்கும் மக்களுக்கு புதிய சிந்தனைகளுடன் இளமையான வேட்பாளர் என்பது மிகவும் பலமான விடயமாகும். இருப்பினும் சொத்துக்களைக்காட்டாமை, பல்வேறு பாரிய நிறுவனங்களால் மக்ரோனின் தேர்தல் பிரச்சாரங்களுக்கு வழங்கப்படும் நிதிகள் போன்றவை மக்ரோன் ஆட்சிக்கு வந்தால் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும் எனக்கேள்விகள் எழும்பியுள்ளன.




**Marine Le Pen**

தீவிர வலது முன்னணிக்கட்சியின் ஒப்பற்ற தலைவி

**“நான் அதிபரானால் நிச்சயமாக பிரான்ஸ் மக்களுக்கான அதிபராக செயற்படுவேன் ஐரோப்பிய ஒன்றியத்தின் நலன்களுக்காகவோ அல்லது ஜேர்மன் சான்சலியரின் துணைத்தலைவராகவோ இருக்கமாட்டேன்”**

- ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற்றம்.
- இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது கூடுதல் வரி.
- ஓய்வுபெறும் வயது 60 ஆக மாற்றப்படும்.
- பிரான்சில் பணிபுரியும் வெளிநாட்டவர்களின் ஊதியம் மேலான கூடுதல் வரி
- அகதிகளை அனுமதி முற்றாகத்தடை.

தற்போது பல்வேறு காரணிகளால் அதிருப்தியில் இருக்கும் பிரான்ஸ் மக்களும் அடிப்படை வலது முன்னணிக்கட்சி ஆதரவாளர்களும் இவரது முக்கிய பலமாகும்.



எந்தப்பிழையை
எங்கே கண்டாலும்
அது
உங்களிடமிருந்தால்
திருத்திக்கொள்ளுங்கள்!

ஒரு முழுமையான நேர்மையான இடதுசாரிய மக்கள் ஆட்சி கொடுக்கக்கூடிய முழுமையான நிகழ்ச்சி நிரல்கள் பெனுவா ஹமோனிடமும் யோன் லூக்மெலஞ்சனிடமும் உள்ளன. பிரான்சின் ஆட்சிப்போக்கு மாறுவதற்கான சரியான தருணம் இதுதான்.

இருப்பினும் வலதுசாரி ஆதரவாளர்களுக்கோ, வலது முன்னணி ஆதரவாளர்களுக்கோ தங்கள் வேட்பாளருக்கு வாக்களிப்பதில் எந்தவொரு குழப்பமும் இல்லை.

ஆனால் இடதுசாரிய ஆதரவாளர்களுக்கு இறுதி நிமிடம் வரை குழப்பம் தான் ! பெனுவா ஹமோனா? யோன் லூக்மெலஞ்சோனா? இல்லை இன்னும் இம்மனுவல் மக்ரோனா? என்பதில் குழம்பி வாக்குகள் பிரிந்து போகும்.

இந்நிலை மிகவும் மோசமான நிலையாக ஆய்வாளர்களால் கருதப்படுகின்றது.

●



பிரான்சில் 6.5 மில்லியன் மக்கள் சூழல் மாசுள்ள பிரதேசத்தில் வாழ்கிறார்கள். அசுத்த வாயு, மற்றும் பேரிரைச்சல்களால் இம்மக்கள் வாழ்வு நெருக்கடிக்குள்ளாவதாக சூழல் பாதுகாப்பு அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.




உலகக் கைப்பந்து சம்பியன் போட்டியில் பிரான்ஸ் ஆறாவது தடவையாகவும் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. ஜனவரி 31ல் பாரிசில் பிரான்சுக்கும் நோர்வேக்கும் இடையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் 33–26 என்ற கணக்கில் வெற்றியைத் தமதாக்கிக்கொண்டுள்ளனர்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# மீண்டும் ஹொலந்த்!



அதிகாரபூர்வமாக அதிபர் பிரான்சுவா ஹொலந்த் தான் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என அறிவித்துள்ளார். இருப்பினும் மீண்டும் பிரான்சுவா ஹொலந்த் தேர்தல் களத்தில் இறங்கும் சாத்தியங்கள் உள்ளதாக நம்பப்படுகிறது.

சோசலிசக்கட்சியினரின் அணிப்பிளவு, வலதுசாரிக்கட்சி வேட்பாளர் François Fillon மீதான தொடர் குற்றச்சாட்டுகள், மக்ரோனின் மீதான நம்பிக்கையின்மை (கருத்துக்கணிப்புகள் வேறு விதமாக இருப்பினும் மக்ரோன் இரண்டாம் சுற்றில் வெல்வதற்கு சாத்தியமில்லை என்பது அரசியல் ஆய்வாளர்களின் கணிப்பாகும்) போன்ற பல்வேறு காரணிகளால் பிரான்சின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகவேயுள்ளது. நிலைமை இவ்வாறு தொடருமாயின் வலது முன்னணிக்கட்சி வேட்பாளரான மரின் லூப்பனின் வெற்றியென்பது தவிர்க்க முடியாமல் நடந்தேறும்.

மரின் லூப்பனின் வெற்றியை தடுக்க வேண்டுமாயின் அதற்கான ஒரேயொரு தகைமை தற்போதைய நிலையில் அதிபர் பிரான்சுவா ஹொலந்துக்கு மட்டுமேயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கருத்தை சோசலிசக்கட்சியின் ஒரு சாராரும், அதிபரின் மிக நெருக்கமான அரசியல் ஆய்வாளர்களும் தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர். இரகசியமாக அதிபருக்கான 500 ஆதரவுக் கையொப்பங்கள் சேகரிக்கப்பட்டுவிட்டன. நிலைமையின் தீவிரத்தைப் பொறுத்து அதிபர் பிரான்சுவா ஹொலந்த் மீண்டும் தேர்தல் களத்தில் இறங்கும் வாய்ப்புகள் பலமாகவுள்ளதாக Elysée வட்டாரங்கள் தெரிவித்து வருகின்றன.


லாக்கூர்னெவ்
சிவன் கோவிலில்
29.04.2017
அட்சயதிருதியை
விஷேட பூசை
நடைபெறும்




















சைவ சமய வகுப்புக்கள்
லாச்சப்பல்
அம்மன் கோயிலில்
இலவசமாக
நடாத்தப்படுகின்றன.







இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு





வீதியோரங்கள், தொடரி நிலையங்கள், மெற்றோ நிலையங்களில் சலம் கழிப்பது மக்கள் மத்தியில் வெறுப்பூட்டும் விடயமாகவே காணப்பட்டாலும் அதைத் தடைசெய்வது என்பது இயலாத ஒன்றாகவே இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்கு ஒரு சிறு தீர்வாக சூழலோடு இசைந்து போகும் வகையில் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. «Uritrottoir» (uriner மற்றும் நடைபாதை என்பதன் பிரெஞ்ச் சொற்களில் இருந்து பெறப்பட்ட சொல்) என்ற பெயரோடு முதலில் இரு சலம் கழிக்கும் இடங்கள் நிறுவப்பட உள்ளன. இவை பயன்தருமாக இருந்தால் பாரிஸில் உள்ள அனைத்து தொடரூந்து நிலையங்கள், மெற்றோ நிலையங்களிலும் இவை அமைக்கப்படவுள்ளன.

பெரிய பூச் சாடி போன்று அழகாக காட்சி தரவுள்ள பகுதிக்குள் சலம் கழிக்கப்படும். அடியில் தேக்கி வைக்கும் வகையில் மரம், மண் போன்றவற்றால் உருவான கலவை காணப்படும். அவற்றை காலப்போக்கில் மாற்றவும் முடியும் என்கின்றனர் வடிவமைப்பாளர்கள். பரீட்சார்த்த வடிவமைப்பு Gare de lyon நிலையத்திலேயே முதலில் அமைக்கப்படவுள்ளது.

## முத்திரை குத்தும் நாய்கள்

நாய்கள் சலம் கழிப்பதனூடாக அந்த இடத்தை "தனது" என முத்திரை குத்துகின்றன. மரங்கள், நடைபாதை ஓரங்கள், சுவர்கள், ஒட்டைகள் என அவை புதிதாகக் காணும் இடங்களைத் தமதாக்க அவற்றின் மீது சலம் கழிக்கின்றன. ஆனால் வாகனங்களின் ரயர்களை அவை மிகவும் விரும்புவதாகவே மனிதர்கள் கருதுகின்றனர். ஆனால் நாய்களைப் பொறுத்தவரை ரயர்களைத் தேர்ந்தெடுக்கவும் அதே காரணம் தான்! தனக்கென உரிமைப்படுத்துவதே! ஓடிவிட்டு வரும் வாகனத்திலிருந்து வெளிவரும் ரயரின் மணம் அந்தப் பிரதேசத்தில் ஒரு புதிய மணமாகவும் புதிய பொருளாகவும் நாய்களால் உணரப்படும். ஆகவே உடனடியாக அதைத் தனது என முத்திரை குத்த விரும்புகின்றன. ஏற்கனவே அந்த ரயர் மீது இன்னொரு நாய் சலம் கழித்து உரிமை கோரியுள்ளதா என முகர்ந்து பார்த்து அவ்வாறு இல்லையென்றால் மட்டுமே மற்றைய நாய் உரிமைகோருகின்றது! ஆனால் ஓடிவிட்டு வரும் வாகனத்தின் ரயரின் சூடும் மணமும் முன்னொரு தடவை சலம் கழிக்கப்பட்டிருந்தாலும் அந்த மணத்தை நீக்கிவிடும். எனவே நாய்களைப் பொறுத்தவரை அவை புதிய பொருளாகவே கருதுகின்றன.






## வாழைப்பழமும் இல்லாது போகுமா?

உலகில் வருடத்திற்கு 100 மில்லியன் தொன் வாழைப்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பழங்களில் அதிகளவு நுகரப்படுவதும் வாழைப்பழமே!

இன்று நாம் நுகரும் பெருமளவிலான வாழைப்பழங்கள் Cavendish வகைப்பழங்களாகும். இப்பழங்களின் தோல் மிக கவர்ச்சியாக மஞ்சளாகவும், பழங்களின் நடுவில் விதைகள் இல்லாது இருப்பதையும் அவதானிக்க முடியும்.
இவ்விரு காரணிகளுக்காகவும் இவ்வகை வாழைப்பழங்களின் மரபணுக்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மரபணுமாற்றம் பெற்ற வாழைகளில் விதைகள் இல்லாததால் அவை பெருகுவதற்கான ஒரே வழி குளோனிங் முறையாகும். தற்போது இவ்வாழைகள் மிகவும் நோயெதிர்ப்பு குறைந்தவையாகவும், புதிய வைரஸ் தொற்றுக்குள்ளானவை யாகவும் வருகின்றன. இக்காரணங்களால் உலகில் அதிகளவு நுகர்வில் இருக்கும் Cavendish வாழைப்பழங்கள் இல்லாமல் போகும் வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை உலகில் ஆயிரம் வகைக்கும் மேலான வாழைமரங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றைப்பிடித்து மரபணுக்களை மாற்றி உங்களுக்கு உண்ணத்தருவோம் எனவும் அவர்கள் எங்களை ஆறுதல் படுத்துகின்றனர்.





இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# திருப்பதி வீடியோ மகேசன்

## 35 வருட அனுபவம் உள்ள சேவை

**Wedding, birthday and all occasions**








பழைய **VHS** கசற்றுக்களில் இருந்து
**DVD இலவசமாக**
செய்து கொடுக்கப்படும்








**10.04.1982 ஆம் ஆண்டு முதல் என்றென்றும் மக்கள்**
**மனங்கவர்ந்த வீடியோ போட்டோ பதிவாளர்**

இரண்டு தலைமுறையின் விருப்பத்தை நிவர்த்தி செய்து மதிப்புடன் இன்றும் இயங்கிவரும் எமது நிறுவனம் தனது **35 வது வருட நிறைவுகண்டு** வெற்றிநடைபோடுகின்றது

இந்தவேளையில் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்

**உங்கள் இல்ல கொண்டாட்டங்களை ஏமாற்றமின்றி இனிதே நடாத்திட**
**எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

E-mail : tpv@hotmail.fr
Fb : thiruppathy videos

01 60 17 74 86    06 12 43 06 12












# உங்களுக்குத் தெரியுமா?

## பிரான்ஸ் அரசியல் தலைவர்கள் எவ்வளவு ஊதியம் பெறுகின்றார்கள்?

**அரசியல்** அதிகாரம், முடிவெடுக்கும் திறன், மக்களுக்கான சேவை இவைக்கு அப்பால் நம்மை ஆளுபவர்கள் பெறும் ஊதியமும் முக்கியமானதே!

தேர்தலை நோக்கி மெல்ல நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் பல அமைச்சர்கள் மற்றும் வேட்பாளர்களின் ஊழல் விவகாரங்களும் வெகுவாக வெளிக்கொண்டுவரப்பட்டு பல அரசியல் பிரபலங்களின் முகத்திரைகள் கிழிக்கப்பட்டு வருகின்றன.

**"ஊழல் இல்லாத அரசியல் தலைவர்கள் எமக்கு முக்கியம்"** **"அரசியல் தலைவர்கள் தமது சொத்து விபரங்களை வெளிப்படையாக சமர்ப்பிக்க வேண்டும்"** எனக்கோரி மிக அண்மையில் இரண்டு தடவைகள் பாரிசில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் Pause people இதழியலாளர்கள் பிரான்ஸ் அரசியலில் கோலாச்சுபவர்களின் வருமானங்களை வெளியிட்டுள்ளனர்.

1. அதிபர் பிரான்சுவா ஹொலந்த் : *12696 யூரோக்கள்* net. மற்றும் ஒரு நாட்டு அதிபர் பெறக்கூடிய அனைத்து விதமான சலுகைகளும். தங்குமிடம், அலுவலகம், வாகனம், இலவச போக்குவரத்து, விடுமுறை தங்குமிடம், பாதுகாப்பு, இன்னும் பல.

2. Jean Marc Ayrault : *22450 யூரோக்கள்* (மொத்தத்தொகை – பல சம்பளங்கள்)
   - 2000 யூரோ Saint-Herblain முன்னாள் நகரசபைத்தலைவர்
   - 2000 யூரோ Nantes நகரசபை ஆலோசகர்
   - 1800 யூரோ கல்வித்துறை (1979 முதல் இன்று வரை உத்தியோக பூர்வமாக ஜேர்மன் மொழி ஆசிரியராக பதவியில் உள்ளார்)
   - 6650 யூரோ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியம்
   - 2500 யூரோ முன்னாள் பாராளுமன்ற செயற்குழுத்தலைவர்
   - 7500 யூரோ தற்போதைய பதவியான வெளிவிவகாரத்துறை அமைச்சர்

3. Jacques Chirac : *30000 யூரோ*
   - 5250 யூரோ முன்னாள் அதிபர் ஓய்வூதியம்
   - 5322 யூரோ முன்னாள் Corrèze பாராளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியம்
   - 5000 யூரோ முன்னாள் பாரிஸ் மாநகரசபை ஆலோசகர்
   - 2900 யூரோ முன்னாள் Cour des comptes பிரதிநிதி
   - 12000 யூரோ அரசியல் அமைப்புச்சபை இருக்கைக்கான வருமானம்

4. நிக்கோலா சார்க்கோசி : *22150 யூரோ*
   - 5250 யூரோ முன்னாள் அதிபர் ஓய்வூதியம்
   - 1900 யூரோ முன்னாள் Haute-de-Seine பாராளுமன்ற உறுப்பினர்
   - 2000 யூரோ முன்னாள் மாநகரசபைத்தலைவர் ஓய்வூதியம்
   - 13000 யூரோ அரசியல் அமைப்புச்சபை பிரதிநிதித்துவம்

5. Valéry Giscard d'Estaing : *30000 யூரோ.*
இவரும் Jacques Chirac பெறுவதைப் போன்று ஒரே செயற்பாடுகளுக்கான ஓய்வூதியங்களின் மொத்தத் தொகையாகும்.

6. Jacque Barrot : *28500 யூரோ.*
இவர் 2014ம் ஆண்டில் இறந்து விட்ட பிரான்சின் முக்கிய அரசியல் பிரமுகராகும். அரசியலமைப்புச்சபை ஓய்வூதியம் (12000 யூரோ) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கான ஐரோப்பிய ஆணைக்குழு துணைத்தலைவர் ஓய்வூதியம் – 5322 யூரோ.

7. Jean-Luc Mélenchon : *12009 யூரோ.*
'La France insoumise' கட்சித்தலைவர் . தற்போதைய அதிபர் தேர்தல் வேட்பாளர்
   - ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் 7807 யூரோ
   - மற்றும் மேலதிக கொடுப்பனவுகளாக 4202 யூரோ

8. Jack Lang : *12800 யூரோ*
கலைத்துறை, கல்வித்துறை என பல அமைச்சுகளில் பணியாற்றியவர். 1982ல் இவர் ஆரம்பித்து வைத்தது தான் இன்னும் கலைத்துறையினர் சிறப்பாக கொண்டாடும் Fête de la Musique ஆகும்.
   - முன்னாள் Blois மாநகரசபைத்தலைவர் ஓய்வூதியம் 5800 யூரோ
   - Pas-de-Calais பாராளுமன்ற உறுப்பினர் 7000 யூரோ

9. Alain Juppé - *15337 யூரோ.*
வலதுசாரிக்கட்சியின் முக்கிய ஆளுமையும், போர்தோ மாநகரசபைத் தலைவருமாவார். 2017 அதிபர் தேர்தலின் முதற் சுற்றில் François Fillon இடம் தோல்வியைச் சந்தித்தார்.
   - Bordeaux மாநகரசபைத்தலைவர் 2700 யூரோ
   - முன்னாள் அமைச்சருக்கான ஓய்வூதியம் 7500 யூரோ
   - முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஓய்வூதியம் 5322 யூரோ

10. François Fillon : *13512 யூரோ*
முன்னாள் பிரதமரும், எதிர்வரும் அதிபர் தேர்தலில் வலதுசாரிக் கட்சிசார் வேட்பாளருமாவார்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

- தற்போதும் பாராளுமன்ற உறுப்பினர் 7100 யூரோ
- மேலதிகக் கொடுப்பனவுகள் 6412 யூரோ

*11.* Marine Le Pen : *15182* யூரோ

வலது முன்னணிக்கட்சித்தலைவியும், 2017 அதிபர் தேர்தல் வேட்பாளரும் ஆவார்.

- ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஊதியம் 7956.57 யூரோ
- மேலதிகக் கொடுப்பனவு 4299 யூரோ
- பிராந்தியசபை ஆலோசனைக்குழு 2927 யூரோ

*12.* Marion Maréchal Le Pen : *13512* யூரோ

மரின் லூாப்பனின் மருமகள் வலது முன்னணிக்கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர். மிக இளவயது (22) பாராளுமன்ற உறுப்பினர் எனப்பல பெருமைகள். ஊதியமாக 7100 யூரோக்களும், மேலதிக கொடுப்பனவாக 6412 யூரோக்களும் பெறுகிறார்.

இவர்களை விட முன்னாள் சுகாதாரத்துறை, விளையாட்டுத்துறை என பல அமைச்சரவைகளை நிர்வகித்த Roselyne Bachelot *6480* யூரோ.

முன்னாள் பாரிஸ் 7 மாநகரசபைத்தலைவியும், நீதித்துறை அமைச்சரும், தற்போது ஐரோப்பியப்பாராளுமன்ற உறுப்பினருமான Rachida Dati *15000* யூரோ. பாரிஸ் மாநகர முன்னாள் நகரபிதாவுமான Bertrand Delanoë *13377* யூரோக்களும் பெறுகின்றனர். ●








## Campus Paris-Jourdan

## பாரிஸ் நகரில் மீண்டுமொரு உயர் கல்விக்கூடம் !

பிரான்சில் மிகவும் மதிப்புமிக்க பல்கலைக்கழகங்களான ENS (École Normale Supérieure) ம் PSE பாரிஸ் பொருளாதார உயர்கல்விக்கூடத்தின் ஒரு பகுதி யுடன் உள்ளடக்கிய பல்கலைக் கழகமாக உதயமாகியுள்ளது. Campus Jourdan ENS-PSE எனப்பெயர் சூட்டப்பட்டுள்ள இப்பல்கலைக்கழகம் 12500 m² அளவில் புதிய கட்டிடங்கள் மற்றும் புனரமைக்கப்பட்ட கட்டிடங்கள் என முற்றிலும் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது. பாரிஸ் 14 பகுதியில் Cité Univercitaire பல்கலைக்கழக வளாகத்திற்கும் அருகாமையில் Campus Jourdan அமைந்துள்ளது.

பல்கலைக்கழகத்தைத் திறந்து வைத்துப் பேசிய அதிபர் பிரான்சுவா ஹொலந்த் இக் கல்விக்கூடமானது பாரிசில் உயர்கல்வி பயில்பவர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களுக்கான ஓர் வரப்பிரசாதமாகும் என மகிழ்ந்துள்ளார்.

2014ம் ஆண்டு ஆரம்பமான கட்டுமானப்பணிகளின் செலவீனங்கள் 49 மில்லியன் யூரோக்களாகும். 31, 5 மில்லியன் யூரோக்கள் Île-de-France லும், 14.5 மில்லியன் அரசாலும், 3 மில்லியன் யூரோக்கள் பாரிஸ் மாநகர சபையா லும் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் என 2000 பேர் இப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றவுள்ளனர்.



உலகில் மிக எளிமையானது பிறரிடம் குறை காண்பது.
உலகிலேயே மிகக் கடினமானது தன் குறையை தானே உணர்வது.

# Lyca TV

## உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்



**ஒருவருட இணைப்புச் சந்தா**

**€99**
மட்டுமே
SET TOP BOX INCLUDED

**புதுப்பித்தல்**

**15**
மாதங்கள்
**€99**
மட்டுமே

**45க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்**

INCLUDED

**TENT KOTTA**

1000க்கும் அதிகமான Tamil திரைப்படங்கள்



**EROS NOW**

6000க்கும் அதிகமான Hindi & Tamil திரைப்படங்கள்




**7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்**

## SUBSCRIBE NOW!

CUSTOMER SERVICE
**036 967 2151**

SALE
**014 607 7345**

www.lycatv.tv




# நினைவுகூரப்படும் ஆர்மேனியப் படுகொலைகள்

**இன்று** ஒரு நூற்றாண்டைக் கடந்து விட்ட ஆர்மேனியப் படுகொலைகள் வருடாவருடம் பிரான்சில் நினைவு கூரப்படுகின்றது. பிரான்ஸ் வாழ் ஆர்மேனியப் புலம்பெயர் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட உணவு ஒன்று கூடலில் அதிபர் பிரான்சுவா ஹொலந்த் தனது ஆட்சிக்காலத்தில் நான்காவது முறையாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். இது அதிபரின் இறுதி முறையும் கூட. 2017 தேர்தல் வேட்பாளர் Benoit Hamon முதல் பல பிரான்ஸ் அரசியல் தலைவர்கள் பங்குபற்றிய இந்நிகழ்வில் அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் உரை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.


மனித குலத்திற்கு எதிரான இன அழிப்புப் படுகொலைகள், போர்க்குற்றங்கள் என அனைத்து விதமான குற்றவியல் நிகழ்வுகளை நினைவு கூர வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும் எனத்தெரிவித்த அதிபர் பிரான்சுவா ஹொலந்த், இன அழிப்புகளை நினைவு கூருவதற்கான தேசிய அளவிலான நினைவுதினத்தை உருவாக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தனது ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அதிகாரபூர்வப்படுத்த முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் போர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் ஒரு நல் வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க வேண்டியது ஒவ்வொரு வல்லரசுகளின் கடமையாகும். ஐக்கிய அமெரிக்கா போன்ற பெரும் வல்லரசுகள் மெக்சிக்கோ நாட்டினரின் வருகையை தடுக்க அவர்கள் போர்களால் பாதிக்கப்படவில்லை எனக்காரணம் காட்டி தடுப்புச்சுவர்கள் எழுப்புவதையும், சிரிய அகதிகளை நாம் எமது நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை என்ற அமெரிக்க அதிபர் டொனாலட் ட்ரம்பின் கூற்றையும் பிரான்ஸ் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




MAXIME
COIFFURE
63 Rue du Général de Gaulle
94350 Villiers-sur-Marne
07 82 52 61 63





# ஆபாச இணையத்தளங்கள்
## பெற்றோர்களுக்கான எச்சரிக்கை!

ஆபாச இணையத்தளங்களைச் சிறுவர்கள் பார்வையிடுவதைத் தடுக்கும் நோக்கில் e-Enfance என்னும் அமைப்பு அநாமதேயமாக ஆலோசனை வழங்கவுள்ளது. ஆபாச இணையத்தளங்கள், ஆபாச விளம்பரங்கள், சாதாரண இணையத்தளத்தில் திடீரெனத் தோன்றும் ஆபாச பொப்–ஆப்ஸ் போன்றவை சிறுவர்கள் கணினியைப் பார்வையிடும் போதும் தோன்றுவது சிறுவர்களின் மனதளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு விடயமாகக் கருதப்படுகின்றது.

சில சமயங்களில் சிறுவர்கள் இவ்வாறான ஆபாச இணையத்தளங்களுக்குச் செல்வதை பெற்றோர்களோ அதிகாரிகளோ கட்டுப்படுத்த முடிவதில்லை. இருந்தாலும் பல வழிகளில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்கின்றனர் e-Enfance அமைப்பினர். இதற்காக இலவச தொலைபேசி இலக்கமும் (0 800 200 000) வெளியிடப்பட்டுள்ளது. பிரான்ஸைப் பொறுத்தமட்டில் இணையத்தளங்களில் ஆபாச விடயங்கள் தடைசெய்யப்பட்டிருப்பினும் சில நேரங்களில் விளம்பரங்கள் தோன்றுவதை எதுவும் செய்யமுடியாது.

நீங்கள் எந்த அளவிற்கு ஆபாச விடயத்தை இணையத்தளத்தில் தேடுகின்றீர்களோ அந்த அளவிற்கு விளம்பரங்கள் உங்கள் கணனிகளில் தோன்றும். நீங்கள் இணையங்களில் தேடும், பார்வையிடும் விடயங்களை அடிப்படையாக வைத்தே உங்கள் கணினியில் அது தொடர்பான விளம்பரங்கள் தோன்றும் என்ற அடிப்படை விடயத்தை பெற்றோர்கள் மிகக் கவனத்தில் கொள்ளவேண்டும் என e-Enfance தெரிவிக்கின்றது.

முதலில் இயன்ற அளவு பெற்றோர்கள் தனியான கணினியைப் பாவிக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றது. அல்லது அவ்வாறான ஆபாச விடயங்கள் உள்ளடங்கிய இணையப் பகுதிகளுக்குச் சென்றால் இணைய Historyக்குள் சென்று முற்றாக அழித்துவிடவேண்டும். அல்லது கணினி வல்லுனர் ஒருவரின் உதவியுடன் ஒரு கணினியையே வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் என தனிப்பட்ட வகையில் பிரித்து வைத்திருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர்.

## பெண்களுக்கான நாடு – சுவீடன்

புதிய ஆய்வுகளின் படி உலகிலேயே சுவீடன் தான் பெண்களுக்கு சிறந்த நாடு என தெரிவிக்கப்படுகின்றது. US News & World Reports' என்ற நிறுவனத்தால் 80 நாடுகள் பட்டியலிடப்பட்டு 9,000இற்கும் மேற்பட்ட பெண்களிடம் கருத்து அறியப்பட்டது. பெண்களுக்கான சமத்துவம் வழங்கும் செயற்பாடுகளின் அடிப்படையில் சுவீடன் முன்னிலை வகிக்கின்றது. பால் சமத்துவத்தை எட்டுவதே நாட்டு மக்களின் பிரதான இலக்கு என சுவீடன் அரசாங்கம் கருதுகின்றது. சுவீடனின் கல்வித் திட்டத்திலும் இது முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்படுகின்றது. கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு பல்கலைக் கழக டிகிரிகள் பெண்களுக்கே வழங்கப்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.



Save the Children நடாத்திய உலகிலேயே இளம் பெண்களுக்கான சிறந்த நாடு என்ற ஆய்விலும் சுவீடன் சென்ற வருடம் முதலிடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## பிரான்சில் தொடரும் மூட நம்பிக்கைகள்...

- ஒரு நெருப்புக் குச்சியைப் பயன்படுத்தி மூன்று சிகரெட்டுக்கள் பற்ற வைக்கக் கூடாது. இதுவும் கெட்ட சகுனமாகவே பார்க்கப்படும். இது மேற்கத்தைய நாடுகள் பலவற்றில் கெட்ட சகுனமாகப் பார்க்கப்படுகின்றது. முதலாம் உலகப் போரின் போது திறந்த பதுங்கு குழிக்குள் இருக்கும் போர் வீரர்கள் சினைப்பர் தாக்குதலுக்கு உள்ளாவது அதிகமாக இருந்தது. அந்த நேரத்திலேயே ஒரு தீக்குச்சியைக் கொண்டு ஏனைய இருவரின் சிகரெட்டை பற்ற வைக்க நீண்ட நேரம் பிடித்துவைத்திருக்கவேண்டிய நேரத்தில் சினைப்பர் தாக்குதலுக்கு உள்ளாகினர். முதலாவது சிகரெட் பற்ற வைக்கும் போது சினைப்பர் உசார் நிலைக்கு வந்துவிடுவார். அடுத்ததைப் பற்ற வைக்கும் நேரத்தில் குறிபார்த்துவிடுவார். மூன்றாவதைப் பற்றவைக்கும் போது பற்றவைக்கப்படுபவர் தாக்குதலுக்கு உள்ளாவார். இதனாலேயே இன்றும் இது கெட்ட சகுனமாகக் கருதப்படுகின்றது.

- மெழுகுதிரிகளைப் பகிர்ந்துகொள்வது கூடாது! பிரான்சில் மெழுகுதிரிகளை வைத்து பல மூட நம்பிக்கைகள் உள்ளன. முதலில், நீங்கள் தேவாலயம் ஒன்றில் மெழுகுதிரி கொழுத்துவதானால் தீக்குச்சிகொண்டே கொழுத்த வேண்டுமெனவும் இன்னொருவர் ஏற்றிய மெழுகுதிரி மூலம் ஏற்றினால் நீங்கள் இறைவனை வேண்டுவது உங்களுக்கு நிறைவேறாதாம் மாறாக யாருடைய மெழுகுதிரிகொண்டு ஏற்றினீர்களோ அவர்களைச் சென்று சேரும் என நம்புகின்றனர். இரண்டாவதாக மெழுகுதிரி கொண்டு ஒருபோதும் சிகரெட்டைப் பற்ற வைக்கக் கூடாது என்கின்றனர். பண்டைக் கால கதைகளின் படி அவ்வாறு செய்தால் ஒரு படகோட்டி இறக்க நேரிடும் என நம்பிவந்துள்ளனர்.



# Carlos ன் முற்றுப்பெறாத வழக்கு

பிரான்சில் சரித்திரப் பிரபலம் மிக்க முற்றுப்பெறாத வழக்கு என்றால் அது Carlos ன் வழக்காகத்தான் இருக்கும். 42 வருடங்களுக்குப் பின்னர் மூன்றாவது முறையாக 13 மார்ச் 2017ல் நீதிமன்றம் வழக்கை மறு–பரிசீலனை செய்து தீர்ப்பு வழங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

1974ம் ஆண்டு பாரிசில் Saint-Germain பகுதியில் அமைந்திருந்த Drugstore Publicis வணிக மையத்திற்கு கைக்குண்டு வீசி தாக்குதல் புரிந்த வழக்கே மீண்டும் விசாரணைக்காக திறக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் இருவர் மரணமடைய, 34 பேர் காயமடைந்தனர். இத்தகைய பயங்கரவாத குண்டுவெடிப்புத்தாக்குதல் என்பது அல்ஜீரிய விடுதலைக்குப் பின்னர் பிரான்ஸ் மண்ணில் முதலாவது தாக்குதலாகும்.

1983 மற்றும் 1997ல் இவ்வழக்கு தகுந்த ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. 2010ல் மீண்டும் மேல்முறையீடு செய்யப்பட்டு நீண்ட போராட்டங்களுக்குப் பின்னர் முந்தைய தீர்ப்புகளில் உள்ள குறைகள் சுட்டிக்காட்டப்பட்டு அவை நீதிமன்றத்தால் ஆமோதிக்கப்பட்டதால் நீதிமன்றம் மறு விசாரணைக்கு ஒப்புதல் தெரிவித்துள்ளது.

பிரான்சில் 1970 – 1980களில் மட்டும் Carlos தொடர்ந்த பயங்கரவாதத் தாக்குதல்களால் 11 பேர் மரணமடைந்து, 150 பேர் காயமும் அடைந்துள்ளனர். இவர்களில் இரண்டு பிரான்ஸ் அரச அதிகாரிகள் மற்றும் இரண்டு ரகசியப்பாதுகாப்புத் துறையினரும் அடங்குவர்.

இங்கிலாந்து, நெதர்லாந்து, லெபனான், லிபியா, பாலஸ்தீனம், ஈராக், சிரியா, சூடான் என நாடுவிட்டு நாடு ஒழிந்திருந்த Carlos தனது முகமாற்று சத்திரசிகிச்சைக்காக சூடானில் மயக்க நிலையிலிருக்கும் போது காட்டிக்கொடுக்கப்பட்டு உளவாளிகளால் கைது செய்யப்பட்டார்.

அவர் கைது செய்யப்படவில்லை! அதிகாரிகளால் கடத்தப்பட்டார் என மறைந்த வெனிசுலா அதிபர் Hugo chàvez தொடர்ந்து பிரான்சை குற்றம் சாட்டிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1994ல் பிரான்சிற்கு கொண்டுவரப்பட்டு சில குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தொடர்ந்தும் வெவ்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்காக தண்டனை நீடிக்கப்பட்டு இன்று வரை சிறையிலேயே காலத்தைத் தள்ளிவருகின்றார்.

இன்று 67 வயதாகும் Carlos இன் இயற்பெயர் Il-ich Ramirez Sanchez ஆகும். இவர் வெனிசுலா நாட்டைச் சேரந்தவர். வெனிசுலாவின் கொம்யூனிஸ்ட் கட்சியாளரும், பிரபல வழக்கறிஞரினதும் மகனாகும். கல்விக்காக மகனை பிரான்ஸ் சொர்போன் பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப எத்தனிக்கையில் ரஸ்ய உளவுத்துறையினரால் (KGB) மனம் மாற்றப்பட்டு ரஸ்யா பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்டார். அங்கு KGB யால் பயிற்றுவிக்கப்பட்டார்.

பின்னர் பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் இணைந்து தொடர்ந்து பல ஐரோப்பிய நாடுகளில் பலஸ்தீனத்திற்கு சார்பான செயற்பாடுகளில் ஈடுபட்டும், பல தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டும் வந்தார். இவற்றின் நீட்சியாகவே பிரான்சிலும் பல குண்டு வெடிப்பு சம்பவங்களை அரங்கேற்றினார்.

இன்றும் Carlos க்கு சார்பாக வாதாட நான்கு பிரபல வழக்கறிஞர்களும், சுவிசின் உயர்மட்ட வழக்கறிஞர்கள் அமைப்பின் பிரதிநிதி ஒருவரும் நீதி மன்றத்தில் ஆஜராகியுள்ளனர். பிரான்ஸ் வழக்கறிஞர்களில் முதன்மையானவரான Isbelle Cartant-Peyre, Carlos ன் மூன்றாவது மனைவியாகும் 1984 முதல் Carlos ன் வக்கீலாக செயற்பட்டு வருபவரும் ஆவார். 2001ல் Carlos சிறையில் இஸ்லாம் மதத்தைத் தழுவிய பின்னர் தனது வக்கீலான Isabelle Coutant-Peyreஐ இஸ்லாமிய முறைப்படி சிறையில் வைத்து மணந்து கொண்டார்.

Isabelle Coutant-Peyre, Carlos தவிர்த்து பிரான்சிற்கு எதிரான குறிப்பாக அரசுக்கு எதிரான Mohammed Merah, Dieu donné மற்றும் பல இஸ்லாமிய அமைப்புகளிற்கும் வழக்கறிஞராக செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

2009ல் வெனிசுலாவின் மறைந்த அதிபர் Hugo chàvez, Carlos எனது நண்பன். அவரை தீவிரவாதி என பிரான்ஸ் அப்பட்டமாக சோடித்துள்ளது எனவும், அவர் ஒரு தீவிர இடதுசாரியும், ஒரு விடுதலைப்போராளியும் என வெளிப்படையாக தெரிவித்திருந்தார்.

பிரான்சின் நீதித்துறையும், பாதுகாப்புத்துறையினரும் பயங்கரவாதம் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் குறிப்பாகவுள்ளனர். Carlos சிறையிலிருந்தபடியே இத்தனை வருடங்களுக்குப் பின்னரும் தனது பலத்தை நிரூபித்து வருகின்றார். மிகப்பலம் வாய்ந்த மனிதர்கள், அமைப்புகள் Carlos க்குப் பின்னின்று செயற்பட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்க வேண்டும் என்பதில் பிரான்ஸ் கருத்தாகவுள்ளது. தீர்ப்பு வெகு விரைவில் அறிவிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# Mahajana Master Institute - Paris.

## 6வது மாபெரும் பட்டமளிப்பு விழா - 2017

## 6th Annual Graduation Ceremony - April 2017

எமது கல்வி நிறுவனத்தின் 6வது பட்டமளிப்பு விழாவும், விருது வழங்கலும் எதிர்வரும் 09.04.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் ஒருமுறை புதுப்பொலிவுடன் இளைய தலைமுறையினரின் கைகளில் வெகுவிமர்சையாக...

**இடம் : Espace Reuilly : 21, Rue Henard. 75012 Paris (Métro N°. 8 : Mongallet)**

2016ல் **Cambridge University** மற்றும் **British Council - Paris** அமைப்பினால் நடாத்தப்பட்ட **KET** மற்றும் **PET** பரீட்சைகளில் 98% ற்கும் அதிகமான வியத்தகு மதிப்பெண்களை பெற்று 8 கிராம் அசல் தங்கப் பதக்கத்தை வென்று தங்களுடைய பெற்றோரையும், எம்மையும் பெருமைப்படுத்திய பின்வரும் 3 மாணவர்களை வாழ்த்துவதில் *Mahajana Master Institute - Paris* பெருமிதம் கொள்கிறது.

திரு.திருமதி. கிருபாகரன் உஷா
தம்பதிகளின் புதல்வி
கிருத்திகா – Kirutthika
Vigneux-sur-seine

திரு.திருமதி. ஈஸ்வரன் ராதா
தம்பதிகளின் புதல்வன்
ஆதித்தியன் – Ahthithyan
Paris

திரு.திருமதி. குமணன் கலாநிதி
தம்பதிகளின் புதல்வன்
விஷ்வா மயூரன் – Vishwa Mayuran
Cerg-Saint-Christophe

ஆங்கிலக் கல்வித்துறையில்
பல இளம் பட்டதாரி
மாணவர்களை உருவாக்கியதில்
பெருமிதமடைகிறோம்

**ஏப்ரல் முதல் புதிய**
**கற்கை நெறிகள் ஆரம்பம்**



7, Rue Emile Zola,93120 La Courneuve.
Renseignements et Inscriptions au 06 11 68 82 50.

RER B : (La Courneuve Aubervilliers) ல் இருந்து 5 நிமிட நடைதூரம்

Métro : (La Courneuve) ல் இருந்து பஸ் இலக்கம் 173 ஊடாக வந்து Hemet தரிப்பிடத்தில் இறங்கவும்

# துயர் பகிர்வு

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்**

அமரர்
**முத்தையா சோமசுந்தரம்**
(யாழ். ஏழாலை தெற்கு, பிரான்ஸ்)
தோற்றம் : 17. 09. 1934
மறைவு : 27. 01. 2017





அமரர்
**ஆறுமுகம் பசுபதிப்பிள்ளை**
(புங்குடுதீவு, பிரான்ஸ்)
தோற்றம் : 04. 08. 1927
மறைவு : 20 . 01. 2017

அமரர்
**கந்தையா முத்துக்குமாரசாமி**
(வட்டுக்கோட்டை, பிரான்ஸ்)
தோற்றம் : 21. 04. 1939
மறைவு : 25. 02. 2017





அமரர்
**தர்மலிங்கம் பத்மராசா**
தோற்றம் : 15. 02. 1956
மறைவு : 03. 02. 2017

அமரர்
**திருநாவுக்கரசு இராஜலிங்கம்**
(யாழ். தெல்லிப்பளை, ஜேர்மனி)
தோற்றம் : 02. 06. 1966
மறைவு : 05. 02. 2017





அமரர்
**சூ. பெர்னாண்டோபிள்ளை**
(ஊர்காவற்றுறை – ஜேர்மனி)
தோற்றம் : 25. 04. 1959
மறைவு : 27. 02. 2017

அமரர்
**யோசேப் ஆகத்தம்மா**
(யாழ். சங்கானை, பிரான்ஸ்)
தோற்றம் : 17. 10. 1925
மறைவு : 01. 12. 2016





அமரர்
**இ. அன்ரோனியாபிள்ளை**
(யாழ். ஊர்காவற்றுறை, பிரான்ஸ்)
தோற்றம் : 30. 05. 1933
மறைவு : 06. 02. 2017

அமரர்
**துரைராஜன் புஸ்பம்**
(இராசாவின் தோட்டம், பிரான்ஸ்)
தோற்றம் : 15. 06. 1938
மறைவு : 15. 02. 2017





அமரர்
**நடராசா ஜெயக்குமார்**
தோற்றம் : 04. 08.1970
மறைவு : 07. 03. 2017



அமரர்
**பரமாநந்தம் ஜெயலக்சுமி**
(பிரான்ஸ்)
தோற்றம் : 26. 08. 1959
மறைவு : 20. 02. 2017



நான் ஜனாதிபதியானால்...

## பிரான்சின் பிரதமராக ஒரு பெண்ணைத் தெரிவுசெய்வேன்!

பிரான்ஸ் தேர்தல் களத்தில் அதிக கவனமீர்த்து வருபவர் Emmanuel Macron. கருத்துக்கணிப்புகளில் தொடர்ந்து இரண்டாவது முறையாக மரின் லூப்பனைப் பின்தள்ளி முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

நீண்டகால அரசியல் அனுபவம் இல்லாதவர். சில வருடங்களுக்கு முன்னர் அதிபர் பிரான்சுவா ஹொலந்தால் அரசியலில் அறிமுகப்படுத்தப்பட்டவர். இரண்டு வருடங்கள் பொருளாதார அமைச்சராகச் செயற்பட்டவர் என்பது மட்டுமே ஆரம்பத்தில் இம்மானுவல் மக்ரோனின் அடையாளமாக இருந்தன. ஆனால் இன்று கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் இரண்டாம் சுற்றுக்குத் தகுதியான ஒரேயொரு வேட்பாளராகவும் இன்னும் தேர்தலில் வெற்றியீட்டக்கூடிய தகுதிகள் உள்ளவராகவும் விஸ்வரூபமெடுத்துள்ளார்.

இம்மனுவல் மக்ரோன் தனது தேர்தல் பிரச்சாரத்தில், மே மாதம் நான் பிரான்ஸ் அதிபராகத் தெரிவு செய்யப்பட்டால் பிரான்சின் பிரதமராக ஒரு பெண்ணைத் தெரிவு செய்வதே எனது விருப்பம் என்கிறார். பெண்களுக்கான சம உரிமை என்பது எனது செயற்பாடுகளில் முன்னிலை வகிக்கும் எனவும், அதற்காக பெண் என்ற ஒரேயொரு காரணத்திற்காகவும் அவருக்கு முன்னுரிமை கொடுக்கப்படாது அவர்களின் தகைமைகளும் முக்கியமானது எனவும் தெரிவித்துள்ளார்.

பிரான்சின் பெண் பிரதமர் அனுபவம் என்பது ஒரேயொரு முறை வெறும் 10 மாதங்கள் மட்டுமே நடந்த ஒரு குறைந்தகால அனுபவமாகும். சோசலிசக்கட்சியின் மிக முக்கிய பெண்மணியும், பன்முக அரசியல் செயற்பாட்டாளருமான Édith Cresson இவரே இப்பெருமைக்குரிய பெண்மணியாவர். பிரான்சுவா மித்திரனின் ஆட்சியில் 1991–1992 கால கட்டத்தில் பிரான்சின் பிரதமராகப் பணியாற்றினார். பிரான்சில் 1870ம் ஆண்டுக்குப் பின்னர் உயர்பதவி வகித்த பெண்மணி என்ற பெருமையும் இவரையே சாரும்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



Jacques Chirac ன் பேரனும்

**அரசியல் களத்தில்...**

# Macron க்கு ஆதரவு!



**பிரான்சை** 11 வருடங்கள் தொடர்ந்து ஆட்சிபுரிந்த பெருமைக்குரியவர் Jacques Chirac. வலதுசாரியக்கட்சியின் மிகவும் திறமையான ஆளுமை. இருப்பினும் அவரின் இரு மகள்களும் அரசியலில் பெரிதாக கவனம் செலுத்தவில்லை. Jacques Chirac க்கு ஒரேயொரு பேரன், அவர் தற்போது அரசியலில் தனது தீவிர நிலைப்பாட்டை அறிவித்துள்ளார்.

21 வயதாகவிருக்கும் Martin Rey-Chirac தனது ஆதரவை, En Marche ! தோற்றுவிப்பாளரும், 2017 பிரான்ஸ் அதிபர் தேர்தல் வேட்பாளருமான Emmanuel Macron க்கு வழங்கப்போவதாக அறிவித்துள்ளார். நீண்டகால வலதுசாரிக்கட்சி ஆதரவாளர்களான சிராக் குடும்பத்திலிருந்து இம்மனுவல் மக்ரோனிற்கான இவ்ஆதரவு அரசியல் மட்டத்தில் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. தேர்தலுக்கு சில நாட்களே இருக்கும் பட்சத்தில் சிராக்கின் பேரனின் Macron ஆதரவு Jacques Chirac ஆதரவாளர்கள், அரசியல்வாதிகள் என்ற பேதமில்லாமல் பலரையும் மக்ரோனின் பக்கம் திரும்ப வழிவகுக்கும். இந்நிலை வலதுசாரிக்கட்சி வேட்பாளருக்கு பாதகமாக அமையும் என அனுமானிக்கப்படுகிறது.

1995 – 2007 வரை நிக்கோலா சார்க்கோசியின் இளைஞர் அணியில் செயற்பட்டு வந்த Martin Rey-Chirac, நிக்கோலா சார்க்கோசியின் தோல்விக்குப் பின்னர் கட்சியிலிருந்து வெளியேறி தற்போது En Marche! கட்சியில் இணைந்துள்ளார்.

2012 தேர்தலின் போது Martin Chirac ன் தகப்பன் Thierry Rey அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் தேர்தல் பிரச்சாரங்களில் இணைந்து பணிபுரிந்தார் என்பதும் தற்போதும் விளையாட்டுத்துறை ஆலோசகராகச் செயற்பட்டுவருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**வேட்பாளர்கள் தொடர்பாக சர்வதேச ஊடகங்களின் கருத்துக்கள் சில.....**

- "மரின் லூப்பன் வெற்றிகொண்டால் அது ஐரோப்பிய யூனியனை பாதாளத்துக்குள் இட்டுச்செல்லும்" என ஐக்கிய இராச்சியத்தின் சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும், பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறவேண்டும் என தீவிரமாகப் பிரச்சாரத்தில் ஈடுபடுபவருமான Nigel Farage தெரிவித்துள்ளார்.

- இதை ஒத்த கருத்தையே ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சரும் தெரிவித்துள்ளார்.

- அமெரிக்கர்களின் கருத்துப்படி மரின் லூப்பன் டொனால்ட் ட்ரம்ப் போல அல்லாது சீரான நிலைத் தன்மையுடைய போக்கில் இருப்பதாகவும் பாண்டித்தியம் மிக்க அரசியல்வாதி எனவும் பிரதான ஊடகமான CNN தெரிவித்துள்ளது.

- ரஸ்யாவைப் பொறுத்தவரை ஊடகங்கள் வெளிப்படையாக மரின் லூப்பனை ஆதரிக்கின்றன. அவருடைய தேர்தல் விஞ்ஞாபனங்களும் கோடிட்டு காட்டப்பட்டுள்ளன. அவருடைய குடிவரவுக்கு எதிரான கடுமையான கொள்கைகள் போற்றிப் பாராட்டப்பட்டுள்ளன. அதே நேரம் இம்மானுவல் மக்றோனின் கருத்துக்களை மோசமாக விமர்சிக்கின்றன.

- மரின் லூப்பன்னுக்கு அடுத்து ரஸ்யா Fillonஐயே விரும்புகின்றது. "சட்டத் துன்புறுத்தல்களால் பாதிக்கப்பட்டவர்" என பிரபல ரஸ்யத் தொலைக் காட்சி Vesti Nedeli தெரிவிக்கின்றது. ஏனைய நாடுகளைப் பொறுத்தவரை முன்னாள் பிரதமரான இவரை நம்பிக்கையற்றவராகவும் கேலியோடும் நோக்குகின்றன.


- மக்றோன்: டொனால்ட் ட்ரம்பிற்கான பிரான்சின் பதிலடி! இவரது கருத்துக்கள் பல சந்தர்ப்பங்களில் புதிராகவும் சில தடவைகளில் கவர்ச்சிகரமானதாகவும் இருப்பதாகக் குறிப்பிடும் ஜேர்மனி ஊடகங்கள் "அதிகமாக இலக்கியங்கள் வாசிக்கும் நீலக் கண்கள் கொண்ட பையன்" என தலைப்புச் செய்தியும் வெளியிட்டுள்ளது.

- லண்டனைப் பொறுத்தவரையில் மக்றோனின் கருத்துக்களும் எண்ணங்களும் அவர்களைக் கவர்ந்துள்ளது.

- பிரான்ஸ் ஊடகங்கள் மக்றோனுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகக் குற்றம்சாட்டும் ரஸ்யா, நேட்டோ, ஐரோப்பிய மத்திய வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய மூன்று கூட்டு சாத்தான்களும் மக்றோன் வெற்றிபெறவேண்டும் என விரும்புவதாகவும் தெரிவித்துள்ளது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




1. உங்கள் கையில் 10யூரோக்கள் இருக்கும் நிலையில் வங்கி உட்பட எந்தவிதமான கடனும் இல்லாமல் நீங்கள் இருப்பீர்களானால் 25 வீதமான அமெரிக்கர்களை விட நீங்கள் பணக்காரர்கள் என்றே அர்த்தம்.

2. சூதாட்ட விடுதிகள் நட்சத்திர விடுதிகள் பலவற்றுக்குச் சொந்தமான அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மது அருந்துவது கிடையாது. அவரது அண்ணன் மது போதைக்கு அடிமையாகி அவதிப்பட்டதும் ஒரு காரணமாம். அதே போன்று முன்னாள் அதிபர் பராக் ஒபாமா மிகவும் அரிதாக முக்கிய தருணங்களில் மட்டுமே மது அருந்தினாலும் அவரது பெயரில் அவரது பூர்வீகமான கென்யாவில் பியர் விற்பனையாகின்றது.

3. வலது சாரி, இடது சாரி (leftist, rightist) என்பது பிரான்ஸ் நாட்டிலிருந்து உருவாகிய சொல். பிரான்ஸ் நாட்டின் பாராளுமன்றத்திலேயே லிபரல் கட்சியினர் வலது பக்கமும், பொதுஉடமைவாதிகள் இடதுபக்கமும் இருப்பர். அதிலிருந்தே உலகளவில் இது வழக்கமானது.

4. ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் வெள்ளைமாளிகை அதன் மேலதிக உணவுச் செலவு மற்றும் இதர செலவைக் கணக்கிட்டு பற்றுச் சீட்டை அமெரிக்க அதிபரிடம் கையளிக்கும். அவர் தன் சொந்தப் பணத்திலிருந்து அந்தத் தொகையை செலுத்தவேண்டும்.

5. 100 மணிப் போர் அல்லது கால்பந்து போர் எனப்படுவது 1969ஆம் ஆண்டு El Salvador மற்றும் Honduras ஆகிய நாடுகளுக்கு இடையில் இடம்பெற்ற காற்பந்துப் போட்டி வழி வந்த போர். 100 மணித்தியாலங்கள் அதாவது 3 நாட்கள் நடைபெற்றது. ஏற்கனவே இரு நாடுகளுக்கும் இடையில் இருந்த முறுகல் நிலை 1970 FIFA உலகக் கோப்பைக்கான தகுதிச்சுற்றோடு யுத்தமாக மாறியது.

6. லெபனானில் மட்டுமே பெண்கள் அரசியலில் வாக்களிக்க வேண்டுமாயின் அவர்கள் தொடக்கக் கல்வியை அல்லது உயர் கல்வியை நிறைவு செய்ததற்கான அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பிக்கவேண்டும்.

7. 2008ஆம் ஆண்டுவரை தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவின் பெயர் அமெரிக்க பயங்கரவாத கண்காணிப்புப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.

8. முதன்முதலில் ஐக்கிய நாடுகள் ஒன்றியத்திலிருந்து விலகிய நாடு இந்தோனேசியா. 1965இல் தானாகவே விலகிக்கொண்டு பின்னர் ஒரு வருடத்தில் மீள இணைந்துகொண்டது.

9. 1859இல் அமெரிக்காவிற்கும் பிரித்தானியாவிற்கும் இடையே பன்றிப் போர் (Pig war) இடம்பெற்றது. அமெரிக்கர் ஒருவர் தனது தோட்டத்தில் இருந்த உருளைக் கிழங்கை உண்டதற்காக பிரித்தானியருக்குச் சொந்தமான பன்றியை சுட்டுக்கொன்றார். அதைத் தொடர்ந்து ஏற்பட்டதுதான் பன்றிப் போர்.

10. அமெரிக்க அதிபர் பிரயாணத்திற்காகப் பயன்படுத்தும் எந்த விமானமும் Air force one என்றே அழைக்கப்படும். அது ஒரு விமானத்திற்குரிய பெயர் அல்ல.

11. அமெரிக்காவின் தற்போதைய தேசியக் கொடி 17 வயது மாணவனால் பாடசாலை ஒப்படை ஒன்றிற்காக வரையப்பட்டது.

12. மெக்சிக்கோவின் 34ஆவது ஜனாதிபதியே மிகக் குறைந்த காலம் சேவையாற்றியவர். ஒரு மணித்தியாலத்திற்கும் குறைவாகவே அவர் பதவியில் இருந்தார்.

13. பிரித்தானிய ராணியின் பெயரின் கீழேயே பிரித்தானிய கடவுச் சீட்டு வழங்கப்படுவதால் பிரித்தானிய ராணிக்கு பிரித்தானியக் கடவுச் சீட்டு தேவையில்லை. ஆனாலும் அரச குடும்பத்தில் ஏனைய அனைவரும் கட்டாயம் கடவுச் சீட்டு வைத்திருக்கவேண்டும்.

14. ரஸ்யாவில் பட்டினி சூழ்ந்திருந்த நிலையில் பொருளாதாரத்திற்கு போராடிவந்த காலத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஊதியமாக பணத்திற்குப் பதிலாக மது, தளபாடங்கள், பாத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

15. அப்பிள் நிறுவனத்திடம் திரவப் பணமாக 160 பில்லியன் டொலர்கள் உள்ளது. அது அமெரிக்காவின் திறைசேரியில் உள்ள தொகையை விட அதிகம்.

16. இஸ்ரேல் பாகிஸ்தானுக்கு இடையில் உள்ள விரிசல் காரணமாக பாகிஸ்தான் கடவுச் சீட்டுக்களில் "இஸ்ரேல் தவிர்ந்த ஏனைய எல்லா நாடுகளுக்கும் செல்லுபடியாகும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

17. பிரித்தானிய சட்டத்தின் படி பிரித்தானியாவில் உள்ள குதிரைகள், கழுதைகள் அனைத்தும் "குதிரைக் கடவுச் சீட்டு" வைத்திருக்க வேண்டும்.

18. இரண்டாம் உலகப் போரின் போது Bicycle என்ற நிறுவனத்தால் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட விளையாட்டு அட்டைகள் (playing cards) ஜேர்மனியில் இருந்த போர்க் கைதிகளுக்கு வழங்கப்பட்டது. அவை நீரில் நனைக்கப்படும் போது சிறையிலிருந்து தப்பிப்பதற்காக பாதையின் வரைபடத்தை காட்டும் வகையில் அவை வடிவமைக்கப்பட்டிருந்தது.

19. எதிரிகளின் விமானம் நெருங்கும் போது சமிக்ஞை வழங்கும் நோக்கில் முதலாம் உலகப் போரின் போது ஈபிள் கோபுரத்தில் கிளிகள் வளர்க்கப்பட்டன.

20. துயிலெழுப்பும் அலாரம் கண்டுபிடிக்க முன்னதாக மனிதர்களே அந்தக் கடமையைச் செய்தார்கள். அதாவது பணி ஆட்களை இதற்கென அமர்த்தி அவர்கள் சரியான நேரத்தில் ஜன்னல் அருகே நின்று சத்தம் போடவேண்டும்.


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# பாரிஸ் சுத்தமடைய

## 'மக்கள் மனநிலையில் மாற்றம் வேண்டும்!



**காதலுக்கான நகரமாகவும்**, மின் விளக்குகள், கட்டடக் கலை அழகுக்குப் பெயர் பெற்ற நகரமாகவும் இருந்தாலும் நாய்களின் கழிவுகளும் சிகரெட் அடிக்கட்டைகள், எலிகளின் தொல்லை, சில சந்தர்ப்பங்களில் நீரோடை நாற்றம் என்பன தலை குனிய வைக்கின்றன. துப்பரவற்ற நகரங்களின் பட்டியலில் பாரிஸ் நகரமும் இடம்பெறுவது வருத்தமளிக்கிறது என கவலைதெரிவித்த பாரிஸ் மேஜர் நகரைச்சுத்தப்படுத்த சில திட்டங்களை முன்வைத்துள்ளார்.

அதிக தண்டப் பணம், கண்காணிப்புக் குழு போன்றவற்றின் மூலம் அசுத்தமாக்கலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தாலும் அவை திருப்தியளிப்பதாயில்லை. இந்தத் திட்டமானது மலை போன்ற பெரிய நடவடிக்கை எனவும் முதலில் பாரிஸ் வாழ் மக்கள் தங்கள் மன நிலையில் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் இதற்காக 10 மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"நாகரீகமடைந்த நகரம் ஒன்றின் சுத்தம் ஒவ்வொரு மனிதனதும் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாக வேண்டும். வீட்டில் நடு விறாந்தையில் நீங்கள் குப்பையையோ சிகரட் கட்டையையோ போடுவதில்லை. அதே போன்றே வீதிகளையும் எண்ண வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**அவர் முன்வைத்துள்ள 10 திட்டங்களாக.....**

1. மேலதிக துப்பரவாக்குனர்களை பணிக்கு அமர்த்துதல்
2. மாலை நேரங்களிலும் வீதி சுத்தம் செய்தல்
3. மேலதிக இயந்திரங்களைக் கொள்வனவு செய்து பணியில் ஈடுபடுத்துதல்.
4. விதி மீறுபவர்களுக்கு அதிக தண்டப்பணம் அறவிடுதல்
5. பாரிசின் வீதிகளில் பாவனையற்ற பொருட்களை வைப்போருக்கு எதிராக கடும் நடவடிக்கை (உரிமையாளர்களைக் கண்டுபிடிக்க விசாரணைக் குழுவும் நியமிக்கப்படும்) அத்துடன் "கொரில்லா மாக்கற்றிங்" எனச் சொல்லப்படும் குறைந்த செலவில் முறையற்ற ரீதியில் வீதிச் சுவர்களில் விளம்பரம் செய்தலுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
6. எலிகளின் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டாலும் மேலும் 1.5 மில்லியன் யூரோக்கள் மேலதிகமாக ஒதுக்கப்படுதல்
7. உள்ளூர்வாசிகளும் கூட்டங்களில் கலந்துகொண்டு தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுதல். அத்துடன் வருடந்தோறும் "Big Clean Day" என மக்கள் எல்லோரும் ஒரு நாள் சிரமதானத்தில் ஈடுபடவேண்டும்.
8. வீதித் துப்பரவு தொடர்பில் பாடசாலை தோறும் சென்று விழிப்புணர்வுக் கற்கைநெறி வழங்குதல்.
9. Dans ma rue என்ற பெயரில் புதிய அப்ளிகேசன் அறிமுகப்படுத்தப்பட்டு அதன் மூலம் விதி மீறல்கள் தொடர்பில் பாரிஸ் மக்கள் முறையிடலாம்.
10. அலுவலகங்களின் முன் சிகரட் கழிவுபோடும் கூடைகள் அமைக்கப்படவேண்டும். cafeகள் முக்கியமாக இவற்றை வைத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் கடை நில உரிமம் பறிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வறுமையில் வாடும் ஆயிரம் மாணவர்களை நோக்கி..
இலங்கை தமிழ் பழையமாணவர் ஒன்றியம்
uaets
www.uaets-france.fr
கணக்கு விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்.
ஒரு ஏழைக் குழந்தைக்கு
அறிவூட்டக் கிடைக்கும் சந்தர்ப்பம் பெறுமதிமிக்கது.

Choisy-Le-Roi
அஷ்டலட்சுமி வரதராஜப்பெருமாள் ஆலயத்தில்
வியாழன் தோறும் ஸ்ரீ சீரடிசாய்பாபா விசேட பூஜைகள்,
நற்சிந்தனைகள், சொற்பொழிவுகள் மேலும்
சைவ, வைஷ்ணவ வேதாந்த, சித்தாந்த வகுப்புக்கள்
மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை நடாத்தப்பெறுகின்றன.


Ù Yeux agréée oiseau

## தகவல்

1. பிரான்ஸ் மொழியின் அகராதியில் உள்ள மிக நீளமான சொல் 25 எழுத்துக்களைக் கொண்டது – *Anti-constitutionnellement*
2. ஆனாலும் ஒட்டுமொத்தத்தில் பிரான்ஸ் மொழியின் நீளமான சொல் ஒரு இரசாயனத்தின் பெயர். இது 49 எழுத்துக்களைக் கொண்டது – *Aminométhylpyrimidinylhydroxyéthyl-méthythiazolium*
3. எல்லா உயிரெழுத்துக்களையும் உள்ளடக்கிய மிகச் சிறிய சொல் Oiseau (பறவை)
4. Ù என்ற எழுத்தை வைத்து ஒரு சொல் மட்டுமே பிரான்ஸ் மொழியில் உள்ளது. எங்கே எனப் பொருள்படும் où என்ற ஒரு சொல் மட்டுமே! இந்த ஒரு சொல்லுக்காகவே கணினி விசைப் பலகையிலும் இந்த எழுத்து இடத்தைப் பிடித்துள்ளது.
5. மூன்று e தொடர்ந்து வரும் வகையில் பல சொற்கள் உள்ளன. créée – உருவாக்கப்பட்டது, agréée – அனுமதி வழங்கப்பட்டது.
6. Oeil (கண்) என்ற ஒரு சொல் மட்டுமே பன்மையாகும் போது முற்றாக வேறு எழுத்தில் ஆரம்பிக்கிறது கண்கள் – Yeux
7. பிரான்ஸ் மொழியில் அதிகம் பாவிக்கப்படும் எழுத்து E (14.7%) அதைத் தொடர்ந்து S (7.9%) பின்னர் A (7.6%).
8. பிரான்சின் நகரங்களில் மிகச் சிறிய பெயரைக் கொண்டது Y என்ற நகரம் – வடக்கு பிரான்சில் அமைந்துள்ளது.




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# «Made for sharing»

## கண்டனத்திற்குள்ளாகியுள்ள ஒலிம்பிக் சுலோகம் !

2024ம் ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸ் நகரில் நடைபெற வேண்டும் என்பதில் பாரிஸ் மாநகரசபையும் பிரான்ஸ் ஒலிம்பிக் சம்மேளனமும் ஓயாமல் உழைத்து வருகின்றன. சென்ற ஆண்டுமுதல் பாரிஸ் நகரில் பல புதிய திட்டங்கள், குறிப்பாக விளையாட்டு மைதானங்கள், போக்குவரத்து விரிவாக்கங்கள், சூழல் மாசடைவை கருத்திற்கொண்ட புதிய அணுகு முறைகள் எனப் பல பணி–களை முன்னெடுத்து அமுல்ப்படுத்தி வருகின்றன. சென்ற ஆண்டு 2024 ஒலிம்பிக் போட்டிகளுக்கான சின்னம் வெகு விமரிசையாக வெளியிடப்பட்டிருந்தது. தொடரும் பிரச்சாரங்களுக்கு வலுவூட்டுவதற்காக Made for sharing என சுலோகமும் (Slogan) வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாசகம் வெளியாகி பிரச்சாரங்களுக்கு வலுவூட்டியதோ இல்லையோ சரமாரியான கண்டனங்களை தன்னகப்படுத்தியுள்ளது.

உடனடி எதிர்வினையும், முதற்கண்டனமும் Académie française வாயிலாக முன்வைக்கப்பட்டுள்ளது. **பிரெஞ்சுமொழிக்கு என்ன போதாமை உள்ளது? எதற்காக சுலோகத்தை ஆங்கிலத்தில் ஒலிம்பிக் சம்மேளனம் வெளியிட வேண்டும்?** எனக் கேள்வியை எழுப்பியுள்ளது. அத்துடன் இத்தகைய செயற்பாடு எமது மொழியை அவமதிப்பது போலாகும் எனத் தமது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது.

பிரெஞ்சு மொழி மீதான அத்தனை கட்டுப்பாடுகளும் Académie française வசம் தான் உள்ளது என்பதும் அக்கடமியின் அதிகாரம் இன்றி பிரெஞ்சு மொழியில் ஒரு புள்ளியைத் தன்னும் நீக்கவோ சேர்க்கவோ முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மொழிப்பாதுகாப்பு அமைப்புகள் பலவும் இணைந்து இவ்விடயத்தை நீதிமன்றத்திற்கு இழுத்துள்ளன.

2024 பாரிஸ் போட்டிகளுக்கான செயற்பாட்டுத் தலைவர் Étienne Thobois வைப் பொறுத்தவரை 2024ல் பாரிஸ் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடத்த வேண்டுமாயின் நாம் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனப் பிரதிநிதிகளின் பெரும்பான்மை வாக்குகளைப் பெறவேண்டும். வாக்கெடுப்பு பேரு தலைநகர் லிமாவில் நடைபெறவுள்ளது. அவர்கள் பிரெஞ்சு மொழிப்பற்றாளர்களாகவோ, அதைவிட நமது மொழி தெரிந்தவர்களாகவோ இருக்கப் போவதில்லை எனத் தமது ஆங்கில சுலோகத்திற்கு நியாயம் கற்பித்துள்ளார்.





**தமிழர் விளையாட்டு விழா - பிரான்ஸ்**

**02.07.2017**

மகாஜனக்கல்லூரி ஸ்தாபகர்

**பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை**

நினைவாக 'கருத்தரங்கு'

'இலங்கைப் பாடசாலைகளும் புலம்பெயர் உதவிகளும்'

**24.06.2017**

உங்கள் கொண்டாட்டங்களுக்கான மண்டப அலங்காரம்


மற்றும் தரமான உணவுகளுக்கு

Kannan AVS 06 09 75 32 41

லாச்சப்பலில்... Gooday

Centre de Beauté


## நிலா குறுக்கெழுத்துப் போட்டி – இல. 28



**இடமிருந்து வலம் ...**

1. இசைக்கருவிகளில் ஒன்று (2)
2. தாயாகவிருக்கும் பெண்ணிற்கு செய்யும் சடங்கான வளைகாப்பை இவ்வாறும் அழைக்கலாம் (5)
4. சமையலுக்கு சுவையூட்டும் இலைகளில் ஒன்று (3)
5. ஒருவரை தன்வசப்படுத்துதல் (4)
7. பெண் (2)
8. பெருங்குழப்பம் அல்லது கலகம் என்றும் அழைக்கலாம் (5)
9. இது உடையார் இகழ்ச்சியடையார் என்பது பழமொழி (4)
12. கமலம் (3)
14. பெண்களின் கைகளை அழகுபடுத்தும் இயற்கை அழகுப்பொருள் (4)
15. நாதம் என்பர் சங்கீதம் என்பர் (2)

**மேலிருந்து கீழ்...**

1. இத்தாலியிலிருந்து தமிழகத்திற்கு வந்து தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பெரிதும் பாடுபட்ட முனிவர் (7)
2. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று (8)
3. மேன்மை எனலாம் (3) (குழம்பியுள்ளது)
6. பெண்களின் காலில் பூட்டப்படும் நகை, கண்ணகியின் கைகளில் உள்ளது (4)
10. மருத்துவக் குணங்கொண்ட தாவரம், மஞ்சள் நிறப் பழங்களில் ஊறுகாயும் தயாரிக்கலாம் (5)
11. அண்மையில் தமிழ்நாட்டைத் தாக்கிய புயல் (3)
13. தயிர் கடையப் பயன்படுவது (3)

**வலமிருந்து இடம் ...**

10. மீதம் அல்லது எஞ்சியிருப்பது எனலாம் (4)

**கீழிருந்து மேல்...**

1. ஒவ்வொரு உயிரினத்திற்கும் பிறப்பை போன்று இதுவும் முக்கியமாகும் (4)

✔ உங்கள் பதில்களை 10 வைகாசி 2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

**நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.27ல் பரிசு பெறுபவர்கள்.**

1. இரத்தினா இரத்தினேஸ்வரன் - Les Lilas
2. திருமதி. தயாளன் - Serris
3. ஸ்ருதி ஈஸ்வரன் - 75007 Paris

**சரியான விடை எழுதியவர்கள் :**

- ராஜன் தர்மலிங்கம் (Aulnay-sous-Bois)
- நிவேதா யோகரெட்ணம் (75018 Paris)
- ரிசான் (Chartres)
- தர்மன் யேசுராஜா (Drancy)
- சசிகலா சிவசுதக்குருக்கள் (Le Bourget)
- இளங்குமரன் கனகாம்பிகை (Les Lilas)
- குலராஜசிங்கம் குமாரி (Le Blanc Mesnil)

**போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் !**

இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# Autre Vue

OPTICIEN

*Donnez un sens à votre Regard*

## பாரீஸ் மாநகரில் தமிழ் மக்களின் நன்மை கருதி
## இளைய தலைமுறையின் புதியதோர் உதயம்

சிறியோர் முதல் பெரியோர் வரை சகலவிதமான நவீனரக மூக்குக்கண்ணாடிகள், லென்ஸ் வகைகள் மேலும் பலவிதமான நவீன கோடைகாலக்கண்ணாடி வகைகள் சர்வதேச தரமானதாகவும் மலிவானதாகவும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே நம்பிக்கையான தமிழர் நிறுவனம் Autre Vue அத்துடன் உங்களுக்கான இலவச ஆலோசனைகள் எப்பொழுதும் வழங்கப்படும்.




23 rue lamartine - 75009 PARIS
Tél / Fax : 09 67 33 12 83 - 01 53 20 04 10
email : autrevueparis09@gmail.com
Ouvert du Lundi - Samedi de 10h00 à 20h00

58 AV FLANDRES - 75019 PARIS
Tél / Fax : 09.66.91.54.04 - 01.42.30.54.04
email : autrevueparis19@gmail.com
Ouvert du Lundi - Samedi de 10h00 à 20h00


**9, AvenuePierre et Marie Curie - 93150 Le Blanc Mesnil**
**Tél : 09.67.81.59.11 / Fax : 01.48.67.59.11 optitherapy@gmail.com**

# ‘நீ நினைப்பதை விட வாழ்க்கை பல மடங்கு கற்பனைகள் நிறைந்தது”

**Najat Vallaud-Belkacem**




## சுயசரிதை



பிரான்சின் கல்வி அமைச்சரும், பிரான்ஸ் அரசியலின் தவிர்க்கமுடியாத மிக இளமை யான ஆளுமையுமான Najat Vallaud-Belkacem தனது வாழ்க்கைப் பயணத்தை சுயசரிதையாக வெளியிட்டுள்ளார்.

La vie a plus d’imagination que toi : நீ நினைப்பதை விட வாழ்க்கை பல மடங்கு கற்பனைகள் நிறைந்தது எனத் தலைப்பிட்டு தனது 39வது வய-தில் தனது சுயசரிதையை எழுதியுள்ளார். நான் இன்று பிரான்சில் ஒரு அமைச்சராக இருப்பேன் என்று கற்பனையில் கூட நினைத்ததில்லை. மொறோக்கோவில் ஏதோ ஒரு சிறு கிராமத்தில் பிறந்து சட்டத்தரணி ஆக வேண்டும் என்ற கனவில் மூன்று வருடம் சட்டம் பயின்று திடீரென அரசியல் ஆர்வத்தில் அரசறிவியல் (Political Science) பயின்று இன்று எனது பயணம் இங்கு வந்து நிற்கின்றது.

2002ம்ஆண்டு பிரான்ஸ் அதிபர் தேர்தல் முதற்சுற்றில் விடுமுறையில் சென்றிருந்தபடியால் என்னால் வாக்களிக்க முடியவில்லை. முதல் சுற்றில் வலது முன்னணிக் கட்சி சார்பில் Jean Marie Le Pen இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியிருந்தார். அன்று நான் நேசிக்கும் பிரான்சிற்காக அழுதேன். அன்று முடிவானது எனது அரசியல் பிரவேசம். சிறிது காலத்தில் சோசலிசக்கட்சியின் அடிப்படை உறுப்பினராக இணைந்து கொண்டேன்.

எனது சுயசரிதையை எழுதுவதற்கு எனக்கு தூண்டுதலாக இருந்த இரண்டு விடயங்கள் :

1. இனம், மதம், நாடு, கலாச்சாரம் என்று வித்தியாசம் கொண்ட என்னைப் போன்ற ஒருவர் சரியான பாதையில் காலடி எடுத்து வைத்தால் நிச்சயமாக பிரான்சில் சரியான தகுதிகளைப் பெறமுடியும். எனது வாழ்க்கைப்பயணம் இன்று உள்ள அனைத்து இளைஞர்களுக்கும் பாட மாக அமைய வேண்டும். மேலும் மேலும் உயரத்திற்கு செல்ல வேண்டும் என்ற இலட்சியத்தை நாம் எமது நிறம், இனம், மதம், வாழ்க்கைத்தரம் என்ற வேறுபாடுகளைக் காரணங்காட்டி இழந்து விடக்கூடாது. ஏழை மக்களின் ஒரேயொரு சொத்து எமது இலட்சியமே.

2. என்னைப்பற்றி இங்கே கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அனைத்து விதமான கட்டுக்கதைகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பது.

பிரான்சின் முதலாவது பெண் கல்வி அமைச்சர். Twitter ல் அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் அமைச்சரவையில் அதிக மக்களால் பின்தொடரப்படுபவர். 692000 followers

பிரான்ஸ் அமைச்சர்கள் வரிசையில் 3வது இடம் எனப் பிரான்சில் அரசியலில் அசைக்க முடியாத இடம் தான். கல்வி அமைச்சராக அறிவிக்கப்பட்ட போது ஒரு மொறோக்கோக்காரி, இஸ்லாமியர், பிரான்ஸ் கல்வி அமைச்சரா? எனப்பல ஊடகங்கள் குறிப்பாக வலது முன்னணிக்கட்சி சார் ஊடகங்கள் தலைப்பிட்டு செய்திகள் வெளியிட்டன.

மற்றைய கட்சிகளால் ஏன் சோசலிசக்கட்சியினரால் கூட கல்வி அமைச்சரின் அரசியல் தகைமைகளும், நிர்வாகத்திறனும் வெகுவாகக் கொண்டாடப்பட்டாலும் ஒரு மொறோக்கோ நாட்டவர் பிரான்சின் முதன்மையான அமைச்சரவைகளில் ஒன்றான கல்வி அமைச்சின் தலைமையில் இருப்பதை ஏற்க முடியாமல் தான் இருந்தது.

இத்தகைய காரணமே முன்னாள் நீதித்துறை அமைச்சர் Christiane Taubira வின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது.

பார்வைக்குத்தான் Najat Vallaud-Belkacem ஒரு சிறிய மென்மையான பெண்மணி. செயல் திறனிலும் தன்னம்பிக்கையிலும் நெஞ்சுறுதிமிக்கவர். ஏனென்றால் Najat Vallaud-Belkacem அரசியல் கற்றுக்கொண்டது செகொலன் றோயலின் பாசறையிலாகும் என பிரான்சின் மூத்த செய்தியாளரும் அரசியல் ஆலோசகருமான Françoise Degois தெரிவித்துள்ளார்.

வாழ்க்கையில் ஆயிரமாயிரம் துன்பங்கள் இருந்தாலும்
ஒவ்வொரு சின்னச்சின்னச் சந்தோசங்களையும்
அனுபவிக்கத்தெரிந்தவரே
வாழ்க்கையை வாழத்தெரிந்தவர்.



லாச்சப்பலில்!

# சங்கீதா அச்சகம்

புதிய சேவைகளுடன்...





Imprimerie Sankeet

Tél.: 01 44 72 08 94
sangeethafrance@gmail.com

Tél.: 07 78 70 30 49
E-mail : sankeetfrance@gmail.com

39, Bd de la Chapelle - 75010 Paris M° Ligne 2 : La Chapelle



## சோமாலியா மக்களுக்காக

## இறங்கிய பிரான்ஸ்நாட்டவர்

சமூக வலைத்தளங்களில் மிகவும் பிரபலமானவர் *Jérôme Jarre*. இவரால் பட்டினியில் வாடும் சோமாலியா மக்களுக்காக கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் யூரோக்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

*Vine* எனப்படும் குறு நேர காணொளிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு பகிரப்படும் சமூக வலைத்தளம் ஊடாக மிகவும் பிரபலமானவர் *Jérôme Jarre*. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இவர் வர்த்தக நோக்கம் கருதி தற்பொழுது அமெரிக்காவில் வசித்துவருகின்றார்.

சோமாலியாவில் இருந்து இவரைத் தொடர்பு கொண்ட சமூக நலத் தொண்டரும் இவரது நண்பருமான ஒருவர் ஒரு தாயும் 6 வயதேயான மகளும் தண்ணீர் தேடி 150 கிலோ மீற்றர்கள் வரை நடந்ததாகவும் ஆனால் தண்ணீர் கிடைப்பதற்குள் அந்த சிறுமி மயங்கி விழுந்து அந்த இடத்திலேயே இறந்துவிட்டார் எனவும் அங்கு நேரில் கண்ட சம்பவத்தை விவரித்துள்ளார். மக்களின் நிலை நினைத்தே பார்க்கமுடியாத மிக மோசமான நிலையை எட்டுவதாகத் தெரிவித்த இவரது நண்பர் ஒரு விமானத்தைப் பிடித்து அது முழுக்க இவர்களுக்காக குடிநீரும் உணவும் அனுப்பிவைத்தால் எப்படியிருக்கும் என தனது ஆதங்கத்தை நிறைவேற முடியாத ஆசை போன்றே தெரிவித்திருந்தார்.

ஆனால் மார்ச் 15ஆம் திகதி *Jérôme Jarre* சமூக வலைத்தளங்களில் பாதிக்கப்பட்ட சோமாலிய மக்களுக்கு நிதி சேகரிக்கும் வகையில் உருக்கமான காணொளியை வெளியிட்டுள்ளார். அதிகளவில் காணொளி பகிரப்பட்டதுடன் 5 நாட்களுக்குள் 1.6மில்லியன் யூரோக்கள் நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதற்காக துருக்கி எயார் லைன்ஸ் தமது விமானத்தை வழங்க இணங்கியுள்ளது. மார்ச் 27ஆம் திகதி சோமாலிய மக்களுக்கான உணவு, நீருடன் ஒரு விமானம் மட்டுமல்ல பல விமானங்கள் சோமாலியாவுக்குச் செல்வதாக தெரிவிக்கும் *Jérôme Jarre* தனது டுவிட்டர் பதிவில் நன்றியும் தெரிவித்துள்ளார்.



## Prefecture தொலைபேசி அழைப்பு

## இனி இலவசமில்லை

பாரிஸில் பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொலிஸ் தலைமையகங்களை (*prefecture, commissariat*) தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளும் போது அந்த அழைப்பிற்காக தொலைபேசிக் கட்டணம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 17ஆம் திகதியில் இருந்து கட்டண அறவீடு அமுலுக்கு வந்துள்ளது. இதுவரை காலமும் இலவச இணைப்பாக இருந்துவந்த இந்த சேவைக்கு தற்போது நிமிடத்திற்கு 6 சென்ரிம்கள் அறவிடப்படுகின்றது.

பொலிஸ் தலைமையகம் மற்றும் பொலிஸ் நிலையங்களைத் தொடர்புகொள்ளுவதற்கான தற்போதைய புதிய இலக்கம் 3430 ஆகும். ஆனாலும் இலக்கம் 17 என்ற அவசர பொலிஸ் சேவை தொடர்ந்தும் இலவச இணைப்பாகவே இருக்கும்.

தொலைபேசி ஊடாக பரந்துபட்ட சேவைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நவீனமயப்படுத்தப்பட்ட இந்தப் புதிய கட்டமைப்பை நிறுவுவதற்கான செலவை ஈடுசெய்வதற்காகவே இந்தத் தொகை நிர்ணயிக்கப்படுகின்றது. "இது எந்தவிதமான இலாப நோக்கமும் கருதிய நடவடிக்கை அல்ல. புதிய தொலைபேசி அழைப்பு சேவைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அதற்கான அடிப்படை செலவை நிவர்த்தி செய்யும் நோக்கிலேயே இந்தக் கட்டணம் அறவிடப்படுகின்றது" எனப் பொலிஸ் தலைமையகம் விளக்கமளித்துள்ளது.


MÉTRO MARX DORMOY க்கு அருகில்
SN SUBA TEL
இலங்கை, இந்தியா உட்பட உலகில்
வாழும் உங்கள் உறவுகளின்
கைத்தொலை பேசிக் கட்டணத்தை
(ரீச்சார்ஜ்) எம்மூடாக செலுத்திக்கொள்ளலாம்
SRILANKA :
INDIA :
PHONE
FAX
INTERNET
PHOTOCOPIE
IMPRESSION
ACCESSOIRES
SCANNER
RELIURE
PLASTIFICATION
DÉVELOPPEMENT PHOTO
26, Rue de Torcy - 75018 Paris (Bus:35,60 (Arrêt : Place de Torcy)
Tél: 06 45 28 27 32 Fax : 01 80 81 48 99

# சர்வதேச பாதுகாப்பு மாநாடு



**ஜெர்மனியத்தலைநகர்** Munich ல் 17–19 பெப்ரவரி தினங்களில் சர்வதேச பாதுகாப்பு மாநாடு இடம்பெற்றது. இம்மாநாடு 1963ம் ஆண்டு முதல் வருடாவருடம் பெப்ரவரி மாதம் நடைபெற்று வருகிறதென்பதும், இன்று உலகில் நடைபெறும் சர்வதேச மாநாடுகளில் முன்னிலையில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. 70 நாடுகளைச் சேர்ந்த 350 சர்வதேசப் பாதுகாப்புகள் தொடர்பான முடிவுகளை எடுக்கக் கூடிய பல துறைத் தலைவர்கள் ஒன்று கூடுகின்றனர்.

கடந்த நான்கு தசாப்தங்களாக சர்வதேச பாதுகாப்புக்கொள்கைகளின் பிறப்பிடமாக மூனிச் பாதுகாப்புச் சர்வதேச மாநாடே திகழ்ந்து வருகின்றது.

இவ்வருடம் நடைபெற்ற இம்மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் ஒன்பதாவது பொதுச்செயலாளரான போர்த்துக்கல்லைச் சேர்ந்த அந்தோனியோ குத்தேரேஸ் (Antonio Guterres), சான்சலியர் ஏஞ்சலா மேர்க்கல், பிரான்ஸ் வெளிவிவகாரத்துறை அமைச்சர் Jean Marc Ayrault, பாதுகாப்பு அமைச்சர்கள், விஞ்ஞானத்துறையினர், ஆயுதத் தயாரிப்பு நிறுவனங்கள், சர்வதேச ONG அமைப்புகள், மருத்துவத்துறையினர், சைபர் தொழில நுட்பத் துறையினர், ஊடகவியலாளர்கள் ஆகியோர் பங்குபற்றி தமது ஐயப்பாடுகள், ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள், உலகம் எதிர்கொள்ளவிருக்கும் புதிய அச்சுறுத்தல்களையும் முன்வைத்தனர். மூன்று நாள் அமர்வில் பலரையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கிய விடயமாக Microsoft நிறுவனத்தின் தோற்றுவிப்பாளரான Bill Gates ன் உரை அமைந்துள்ளது.

நாம், வரும் 10 முதல் 15 வருடங்களுக்கு சந்திக்கவிருக்கும் முக்கிய அச்சுறுத்தலாக (Pandémie Globale) பெருந்தொற்று வியாதிகளை அவர் கோடிட்டுள்ளார். மேலும், இது பயங்கரவாதம் கையிலெடுக்கப்போகும் புதிய ஆயுதமாகப் போகின்றது எனவும் எச்சரித்துள்ளார்.

1918ம் ஆண்டு ஸ்பெயினில் 50 மில்லியன் மக்களைக் கொன்றொழித்த விஷக்காய்ச்சல் போன்றோ, 2014 – 2015 ல் மேற்கு ஆபிரிக்காவில் சில மாதங்களில் 12 ஆயி ரம் மக்களை அழித்த எபோலா வைரஸ் போன்றோ ஒரு பாரிய அழிவு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒரு பயங்கரவாத அமைப்பு பெருந்தொற்று நோ யை உருவாக்கக் கூடிய ஏன் ஒரு சாதாரண விஷ க்காய்ச்சலை ஏற்படுத்தக் கூடிய வைரசை காற்றில் பரவவிட்டால் பேரிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய வைரஸ் தாக்குதல் ஏற்படும் பட்சத்தில் உலகில் ஒரு வருடத்தில் 30 மில்லியன் மக்கள் மரணத்தை தழுவும் வாய்ப்புள்ளதாக உலகச் சுகாதார மையத்தின் தொற்றுநோய் தொடர் ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர். இன்றைய நிலையில் ஒரு அணு ஆயுதத் தாக்குதல் போன்றோ, சூழல் மாசடைவு, புவி வெப்பமடைதல் தொடர்பான பிரச்சாரங்கள் போன்றோ பெருந்தொற்று நோய் தாக்குதல்களுக்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனவும் தொடர்ந்து விவாதித்து சரியான பாதுகாப்பு முறை–களை எடுக்க வேண்டும் எனவும் மாநாட்டில் வேண்டப்பட்டது.

ஒரு புதிய வைரஸ் திடீரெனப் பரவி பெருந்தொற்று நோயாக மாறும் பட்சத்தில் அதற்கு எதிரான தடுப்பு மருந்தை ஒரு சில மாதங்களில் தயாரிக்கக்கூடிய புதிய தொழில்நுட்பங்களை கண்டறிவதற்கு அனைத்து நாடுகளும் முதலீடு செய்ய வேண்டும்.

இத்தகைய ஆய்வுகளுக்கான செலவீனங்களாக வருடத்திற்கு 3, 4 மில்லியாட் டொலர் தேவைப்படுகின்றது. எந்தவித ஆயத்தங்களும் இல்லாத பட்சத்தில் ஒரு பெருந்தொற்று நோய் ஒரு வருடத்தில் 570 மில்லியாட் டொலர்கள் செலவீனங்களை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளார்.

Bill Gates தனது Bill and Melinda Gates அமைப்பின் மூலம் பல மில்லியன் டொலர்களை ஏழை மக்களுக்கு உதவுவதற்காகவும், மூன்றாம் உலக நாட்டுக் குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து போடுவதற்காகவும் செலவு செய்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



## Clause Molière - புதிய சட்டமூலம்
## கட்டுமானப்பணி ஊழியர்கள்
## கட்டாயமாக பிரெஞ்சு மொழிபேசவேண்டும்!

**இப்புதிய சட்டமூலம்** சோசலிசக்கட்சியினரின் எதிர்ப்பையும் தாண்டி Ile-de-Franceல் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. Ile-de-Franceல் கட்டுமானப்பணியில் ஈடுபடும் ஊழியர்கள் தமது கட்டுமானத்தளங்களில் கட்டாயமாக பிரெஞ்சு மொழி பேச வேண்டும் என்பதே இச்சட்டமூலமாகும். சேக்ஸ்பியரின் மொழி ஆங்கிலம் என்றால் மொலியரின் மொழி பிரெஞ்சாகும். இக்காரணத்தாலேயே "மொலியர் சட்டமூலம்" என அழைக்கப்பட்டுள்ளது.

இச்சட்டமூலத்தின் ஒரே காரணம் பிரான்ஸ் தொழிலாளர்களுக்கும், பிரான்ஸ் தொழிலகங்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதேயாகும்.

பெரும்பாலும் பிரான்சில் கட்டுமானப்பணிகளில் ஈடுபடுபவர்கள் வெளிநாட்டவர்களே என்பதும் குறைவான செலவீனம் என்பதால் வெளிநாட்டுத் தொழிலகங்களே பணியிலுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சட்டமூலத்தை Ile-de-France இன் தலைவியான Les Républicains கட்சியின் Valérie Pécresse அமுல்படுத்தியுள்ளார். இத்தகைய சட்டமூலத்தால் பிரான்சில் வேலைவாய்ப்புகளில் ஒருவரின் தேசியத்தின் அடிப்படையில் பாகுபாடுகளை ஏற்படுத்தும் என எதிர்ப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.




**பிரான்சில் மார்ச் மாதம் 20**ஆம் திகதியிலிருந்து சைக்கிள் ஓடும் சிறுவர்கள் தலைக்கவசம் அணியவேண்டும் என்பது மிகவும் இறுக்கமான சட்டங்களுடன் கட்டாயப்படுத்தப்படுகின்றது.

அவ்வாறு செய்யத் தவறினால் பெற்றோர்கள் 90யூரோக்கள் தண்டப் பணம் செலுத்த நேரிடும். 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அனைவரும் சைக்கிளை வீட்டை வீட்டு வெளியில் எடுக்கும் போது கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும். அவர்கள் சைக்கிளை ஓட்டினாலோ அல்லது சைக்கிளில் பயணிப்பதென்றாலுமோ கட்டாயம் தலைக்கவசம் அணியவேண்டும்.

2011 – 2015ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 26 சிறுவர்கள் தலைக்கவசம் அணியாது சைக்கிள் ஓடிசெல்லும் போது விபத்துக்குள்ளாகி மரணமடைந்துள்ளனர். சைக்கிள்தாரிகள் இறக்கும் வீதம் கடந்த வருடத்தில் மட்டும் 7வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலா
நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

சங்கீதா அச்சகம்
39, Bld. de la Chapelle - 75010 PARIS

ரூபி அச்சகம்
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை -பாரிஸ் 17
Gooday
208, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

யாழ் இறைச்சிக்கடை
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

ராக ஜோதி மளிகை
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

மாயவர் - மொழிபெயர்ப்பு
7, Rue Perdonnet (M°: La Chapelle)

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

தமிழாலயம்
19, Rue Cail, 75010 Paris

மாலா மளிகை
4, Place de Salengro - Garges les Gonesse

அறிவாலயம் புத்தகசாலை
7, Rue Perdonnet (M°: La Chapelle)

Karan Coiffure
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

ஞானமணி பல்பொருள் அங்காடி
218, Rue. Anatole Francy - 93 Drancy

அம்பாள் ஸ்ரோஸ்
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை - தமிழ்ச்சங்கம்
Le Blanc Mesnil (93), Clichy (92)

அஷ்டலக்சுமி கோயில்
1, Rue Ledru Rollin - 94600 Choisy le Roi

Sagana Coiffure
64, Rue Louis Blanc (M°: La Chapelle)

சிவன் கோயில்
La Courneuve

ROYAL MAHAL
212, Ave. 8 Mai 1945 - Le Blanc Mesnil

கிருஷ்ணா அச்சகம்
73, Rue Doudeauville - 75018 Pari

தீவக செய்திகளை அறிய..
www.Allaiyoor.com

